Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 309

ஞாயிற்றுக்கிழமை 01 ஒக்ரோபர் 2023

புரட்டாதி 14 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## 2030 ஆம் ஆண்டுதான் படைக்குறைப்பு



### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்ரோபர் 1**

**இலங்கை இராணுவத்தினரின் எண்ணிக்கையை எதிர் வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு இலட்சமாகக் குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.** »15

### நீதிபதியின் பதவிதுறப்பு

## நாடாளுமன்றில் கேள்விகள்; தொடுக்க எதிரணிகள் தயார்

கொழும்பு, ஒக். 1

உயிர் அச்சுறுத்தல் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா பதவி துறந்த விவகாரம் தொடர்பில் எதிரணிகள் நாடாளுமன்றத்தில் கேள்விக்கணைகளைத் தொடுக்கவுள்ளன.

இந்த மாதத்துக்குரிய முதல்வார நாடாளு மன்றக் கூட்டத்தொடர் நாளைமறுதினம் 3ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ, இவ்விவகாரம் தொடர்பில் 27/2இன்கீழ், நீதி அமைச்சரிடம் கேள்விகளை எழுப்ப »15

### நீதிபதி சரவணராஜா விவகாரம்;

## விசாரணைக்கு ரணில் பணிப்பு



கொழும்பு, ஒக். 1

குருந்தூர்மலை வழக்கு விசா ரணைகளை மேற்கொண்ட முல்லைத்தீவு மாவட்ட நீதி பதி ரி.சரவணராஜா பதவி விலகியமை தொடர்பில் முழு மையான விசாரணைகளை மேற்கொள்ள »15

## தொட்டிக்குள் விழுந்து ஒரு வயதுக் குழந்தை சாவு!

கிளிநொச்சி, ஒக். 1

கிளிநொச்சி - செல்வாநகரில் தண்ணீர்த் தொட் டிக்குள் விழுந்து ஒரு வயதுப் பெண் குழந்தை நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளது. பரணிதரன் திவனிக்கா என்ற குழந்தையே இவ்வாறு »15

## கோத்தாபயவுக்கு அருகில் அமர்வதற்கு மறுத்த சந்திரிகா



கொழும்பு, ஒக். 1

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்சவுக்கு அருகில் அமர்வ தற்கு முன்னாள் ஜனா திபதி சந்திரிகா பண் டாரநாயக்க மறுத் துள்ளார். »15

## நீதிபதியை அச்சுறுத்தினேனா? எல்லாமே பச்சைப்பொய்!!

### சத்தியம் செய்கிறார் சரத் வீரசேகர



கொழும்பு, ஒக். 1

முல்லைத்தீவு மாவட்ட நீதி வானுடன் நான் கதைத்த தேயில்லை. அவருக்கு நான் அச்சுறுத்தல் விடுக்கவுமில்லை. நான் அவரை அச்சுறுத்திய தாகச் சொன்னால் அது பச்சைப்பொய். வேறு யாராவது அச்சு றுத்தி »15

## அமெரிக்கக் குடியுரிமையை கைவிடப்போவதில்லை

### பஸில் திட்டவட்டம்



கொழும்பு, ஒக். 1

அமெரிக்கக் குடியுரிமையைக் கைவிடப்போவதில்லை என பொதுஜனபெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச »15

## பூநகரியில் சோலர் மின்சாரம் 2024 இல் திட்டம் ஆரம்பம்

கிளிநொச்சி, ஒக்.1

கிளிநொச்சியில், பூநகரிப் பிரதேச செயலர் பிரி வுக்குட்பட்ட பகுதியில் சுமார் 1,200 ஏக்கர் பரப் பளவில் சூரிய மின்சாரத்தின் மூலம் (சோலர்) 700மெகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி »15

## தகவல் அறியும் சுதந்திரத்தை புதிய சட்டம் நசுக்குகிறது

### சர்வதேச சட்டவல்லுநர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 1

இலங்கையில் முன்வைக்கப்பட் டுள்ள உத்தேச நிகழ்நிலைக் காப் புச் சட்டவரைவானது கருத்து வெளியிடுதல், தகவல் அறியும் சுதந்திரம் என்பவற்றின் மீதான தாக்குதலே என சர்வதேச சட்ட வல்லுநர்கள் சங்கம் தெரி »15

## மக்கள் உரிமைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் அதிகாரிகள்

### அமெரிக்கத் தூதுவர் கரிசனை



கொழும்பு, ஒக். 1

இணையவழிப் பாதுகாப்புச் சட்டவரைவு மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு ஊடாகப் பொதுமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை இலங்கை அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டுமென அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கோரிக்கை விடுத் துள்ளார். »15

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நீதித்துறையின் நம்பகத்தன்மை கேள்விக்கு உட்பட்டிருக்கின்றது

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 1

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் தொடர் அழுத்தங்கள் காரணமாக, தான் வகித்துவந்த நீதிபதிப் பொறுப்பில் இருந்து விலகியுள்ளதோடு, நாட்டிலிருந்தும் வெளியேறியுள்ளமையானது நீதித்துறையின் நம்பகத்தன்மை குறித்து மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது - என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

குருந்தூர்மலை வழக்கில் உண்மையை நிலைநாட்டுவதற்காக நடுநிலையுடனும் நீதியுடனும் வழக்கை விசாரித்துவந்த நீதிபதி.ரி.சரவணராஜாவுக்குவிடுக்கப்பட்ட அச்சுறுத்தல்மற்றும்தொடர் அழுத்தங்கள் காரணமாக பதவியிலிருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறியமை என்பது அப்பட்டமாக சிறிலங்கா நீதித்துறையின் சுயாதீனத் தன்மை மீது விழுந்த மற்றுமொரு கரும்புள்ளியாகும்.

குருந்தூர்மலை வழக்கில் தொல்பொருள் பிரதேசத்தில் நீதிமன்ற உத்தரவை மீறி விகாரைக் கட்டுமானம் தொல்பொருள் பணிப்பாளரினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதென அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் கட்டளையாக்கியிருந்தது. அவ்வாறிருக்கையில் இந்தத் தீர்ப்பை மாற்றியெழுத சட்டமா அதிபரால் நீதிபதிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது எனும் செய்தி ஊடகங்கள் வாயிலாக அறியக் கூடியதாகவிருந்தது.

குருந்தூர்மலை வழக்கு மற்றும் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரங்களில் நீதியை நிலைநாட்ட உறுதித்தன்மையோடிருந்த நீதிபதியை 'தமிழ் நீதிபதி' என்று அடையாளமிட்டு நாடாளுமன்றத்தில் விமர்சிக்கும் பொழுதே சிறிலங்கா நீதித்துறையின் சுயாதீனம் விமர்சனத்துக்குள்ளாகி விட்டது. அதேவேளை நீதிபதிக்குரிய பொலிஸ் பாதுகாப்புக் குறைக்கப்பட்டதோடு, அவர் சிறிலங்கா புலனாய்வாளர்களால் கண்காணிக்கப்பட்டார் எனும் செய்தியானது அப்பட்டமாக நீதித்துறையின் சுயாதீனத்தை கேள்விக்குள்ளாக்கியதோடு, நீதியையும் கேலிக்குரியதொன்றாக்கியுள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்தச் சம்பவம் ஒரு விடயத்தை சந்தேகத்துக்கிடமின்றி தெளிவுபடுத்துகின்றது. அதாவது தமிழ்மக்கள் மீது நடந்த இனப்படுகொலைக்கான நீதி, சிறிலங்கா நீதித்துறையால் சாத்தியப்படாது என்பதுவேயாகும். தமிழ் மக்கள் உள்ளக விசாரணையையும் நீதிப் பொறிமுறையையும் நம்பமுடியாது என்பதை இது உறுதி செய்கின்றது. இனப்படுகொலைக்கான சர்வதேச நீதிக்கு இது மேலும் வலுச்சேர்க்கின்றது. இலங்கையில் நீதித்துறையின் சுயாதீனத்தன்மையையும் நம்பகத்தன்மையை உறுதி செய்யவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்துகின்றது - என்றுள்ளது. (ம-125)

# நீதிபதிக்கு உயிரச்சுறுத்தல் சி.ஐ.டி. விசாரணை தேவை!

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 1

**முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு ஏற்பட்டுள்ள உயிரச்சுறுத்தல் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவைக் கோருவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா தான் வகித்த பதவிகள் அனைத்தையும் துறந்து உயிரச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறுவதாக அறிவித்துள்ள நிலையில் அது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு உயிரச்சுறுத்தல் காணப்பட்டதால் அவர் நாட்டை விட்டு வெளியேறுவதாக பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.

உண்மையில், அவருக்கு உயிரச்சுறுத்தல் காணப்பட்டதா?, அவ்வாறு காணப்பட்டால் அது யாரால் விடுக்கப்பட்டது?, அதனுடன் தொடர்புடைய தரப்புகள் யாவை? என்பன தொடர்பில் விரிவான விசாரணையை உடனடியாக முன்னெடுக்கவேண்டும்.

நீதித்துறையின் சுயாதீனத்தையும், நன்மதிப்பையும் உறுதிப்படுத்துவதற்காக இந்தச் செயற்பாடு மிகவும் அவசியமாக உள்ளது. ஆகவே குற்றப்புலனாய்வுப் பிரிவு இந்த விடயத்தில் தாமதமின்றி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ம)

# எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்குத் தயார்

## மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 1



வெற்றி உறுதி என்பதால் எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு பொதுஜன பெரமுன தயார் என்று அறிவிப்பு விடுத்துள்ளார் அந்தக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச.

மஹிந்த ராஜபக்ச, எல்லே குணவங்ச தேரரை நேற்று சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார். அந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன், தலைமைத்துவத்தை ஏற்பதற்கு நாமல் ராஜபக்சவுக்கு, இன்னும் காலம் இருக்கின்றது எனவும் மஹிந்த ராஜபக்ச குறிப்பிட்டார். (ம-44)

# நீதிபதி சரவணராஜா தானாகவே சட்டமா அதிபரைச் சந்தித்தாராம்

## நீதி அமைச்சர் வியாக்கியானம்

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா தானாக முன்வந்து சட்டமா அதிபரைச் சந்தித்தார் எனத் தெரிவித்துள்ள நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச கொழும்பில் அவர் இரண்டு வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் சந்தித்தார் எனவும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து வெவ்வேறு வழக்குகளில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டார். இதன் காரணமாக அவர் தானாக முன்வந்து சட்டமா அதிபரை ஆலோசனைக்காக சந்தித்தார். அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் என்றால் நீதிபதி என்றவகையில் அவசியமான பிடியாணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் அவருக்கு உள்ளது என்றும் நீதி அமைச்சர் தெரிவித்தார். (ம)

# நீதிபதிக்கு விடுக்கப்பட்ட மிரட்டல் நாட்டுக்கு போக்க முடியாத கறை

## சந்திரகுமார் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஒக். 1

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ள செய்தி, இலங்கையின் நீதித்துறைக்கு போக்க முடியாத கறையாகப் படிந்துள்ளது என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச்செயலாளருமான மு.சந்திரகுமார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையின் நீதித்துறைக்கு மிகப்பெரும் அவமானம். தமிழ் மக்கள் இலங்கையின் நீதித்துறை மீது முழுமையாக நம்பிக்கை இழக்கும் நிலைமைக்கு இட்டுச் செல்லும் சம்பவமாக இது இருக்கின்றது. நாட்டில் நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்படுவதோடு, நீதித்துறைப் பணியாளர்களின் சுதந்திரமான பணிகளுக்கும் அச்சுறுத்தல் இல்லாத சூழல் உருவாக்கப்படல் வேண்டும் - என்றார். (எ-214)

# நீதித்துறைக்கான அச்சுறுத்தல்: எதிர்ப்புத் தெரிவிப்பது அவசியம்

## இலங்கைத் திருச்சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.1

முல்லைத்தீவு நீதிபதி பதவி விலகுமளவுக்கு நீதித்துறையை மதிக்காததொரு சூழல் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நீதிக்கே உரிமை இல்லாத நாடாகத்தான் இலங்கை காணப்படுகின்றது. இதற்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும் - இவ்வாறு இலங்கைத் திருச்சபையின் யாழ். குருமுதல்வர் எஸ்.டி.பி. செல்வன் காட்டமாகத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எம்மத்தியில் நிகழும் அனைத்துச் சிக்கல்களுக்கும் அடிப்படையாக இனப்பிரச்சினைக்கு முறையான தீர்வு வழங்கப்படவேண்டும். ஐக்கிய நாடுகள்சபையால் நன்மை வருமெனக் காத்திருந்து இறுதியில் முள்ளிவாய்க்காலில் மனிதப் படுகொலை நடந்து முடிந்தது. இன்றைய சூழ்நிலையில் நாங்கள் ஐக்கியநாடுகள் சபையில் நம்பிக்கை வைப்பது அர்த்தமுள்ளதா? என்ற கேள்வியைக்கூடக் கேட்க வேண்டியிருக்கிறது - என்றார். (எ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாணத்தில் பலமான காற்று!

யாழ்ப்பாணம், ஒக். 1

வடக்கு மாகாணத்தில் இன்று பலமான காற்று வீசும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

சப்ரகமுவ, மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அத்துடன் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அடிக்கடி இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும். வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அத்துடன் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு 40-45 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் - என்றுள்ளது. (ம)



## கடன் மீட்சிக்கு அரசிடம் திட்டங்கள் எதுவுமில்லை

### சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 1

எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சார விநியோக கட்டமைப்பில் தற்காலிகத் தீர்வு எட்டப்பட்டுள்ளதே தவிர நிலையான தீர்வு வகுக்கப்படவில்லை. வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்துவதற்கு அரசாங்கத்திடம் முறையான திட்டமிடல் இல்லை என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளதை அரசாங்கம் கவனத்திற் கொள்ளவேண்டும். என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

செப்ரெம்பர் 27ஆம் திகதி இலங்கைக்கு தீர்மானமிக்கது என்பதை ஆரம்பத்தில் குறிப்பிட்டேன். வங்குரோத்து நிலையடைந்துள்ளதால் இந்தப் பாதையில் செல்லுங்கள் என சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழி காண்பித்துள்ளது. அரசாங்கமும் அந்தப் பாதையில் செல்கிறது.

ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை முழுமையாக அமுல்படுத்தினால்தான் நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நீடிக்கப்பட்ட நிதியுதவி கிடைக்கப்பெறும். முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை இலங்கை முழுமையாகச் செயற்படுத்தவில்லை என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள். ஆகவே இரண்டாம் தவணை நிதியுதவி கிடைப்பனவு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு உலக நாடுகள் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க இணங்கியுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் நடைமுறையில் எந்த முன்னேற்றமும் இதுவரை ஏற்படவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு, இலங்கை எப்போது தமது கடனை மீளச் செலுத்தும் என பிரதான நிலை கடன் வழங்குநர்கள் காத்துக் கொண்டுள்ளார்கள். இதுவே உண்மை.

வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் வழிமுறையை இலங்கை இதுவரை அறிவிக்கவில்லை அது பிரச்சினைக்குரியது என நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். அரச வருமானத்தை அதிகரிக்குமாறு நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. வருமானத்தை எவ்வாறு அதிகரித்துக் கொள்ளவேண்டும் என்பதை நாணய நிதியம் குறிப்பிடாது. அரசாங்கமே அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் - என்றார். (ம)

## மின்சாரக் கட்டணம் மீண்டும் அதிகரிப்பு?

**கொழும்பு, ஒக். 1**

**நாடு முழுவதிலும் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக நீர் மின்சாரத்தைப் பெறுவதற்கு ஏற்படும் உற்பத்திச் செலவை ஈடுசெய்யும் வகையில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்குமாறு இலங்கை மின்சாரசபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் மீண்டும் கோரிக்கையை முன்வைத்துள்ளது.**

ஜனவரி மாத மின்கட்டணத்தை இந்த மாதத்தில்திருத்தியமைக்குமாறுகோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக மின்சாரசபையின் பொதுமுகாமையாளர் கலாநிதி நரேந்திர டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வருடம் எதிர்பார்த்த அளவு நீர் மின்சாரத்தை உற்பத்திசெய்ய முடியாத காரணத்தால் மின்சார உற்பத்திக்கு மேலதிக செலவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த ஆண்டு, 4 ஆயிரத்து 500 ஜிகாவாட் நீர்மின்திறன் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 3 ஆயிரத்து 750 ஜிகாவாட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. அதன்படி, அனல் மின் நிலையங்களில் இருந்து 750 ஜிகாவாட் மின்சாரத்தை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதால் அதற்காக மேலதிக செலவுகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இதனால் மின்சார உற்பத்திக்காக செலவிடப்படும் மேலதிக தொகையை ஈடுசெய்ய மீண்டும் ஒருமுறை மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க அனுமதி வழங்கவேண்டும் - என்றார்.

இதுதொடர்பில் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ கூறுகையில், மின்சாரசபையின் கோரிக்கை பரிசீலிக்கப்படும். நடைமுறைக்கு வரவுள்ள உத்தேச மின்சாரக் கட்டண உயர்வு குறித்து பொதுமக்களின் கருத்துகள் மற்றும் முன்மொழிவுகள் பெறப்படும்- என்றார். (ச-இ)

## நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் நீதியான விசாரணை அவசியம்

### அமைச்சர் ஜீவனும் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 1

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதில் நீதிபதிகள் முக்கியமான பங்கு வகிக்கின்றனர். எனவே, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய ரி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தின்போது இது தொடர்பில் பிரஸ்தாபிக்கவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

'அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் பணியாற்றிய நீதிபதி ரி.சரவணராஜாவின் பதவி விலகல் குறித்து நான் மிகவும் கவலை அடைந்துள்ளேன். குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் வழங்கப்பட்ட தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டு அவருக்கு எதிராக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள விவகாரம் நீதித்துறையின் நிலை குறித்து கேள்வியை உருவாக்கியுள்ளது.

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதில் நீதிபதிகள் முக்கியமான பங்கு வகிக்கின்றனர். அவர்களுக்கு எதிரான அச்சுறுத்தலானது நீதி மற்றும் ஜனநாயகத்துக்கு எதிரான அச்சுறுத்தலாகும். எனவே, நேர்மையுடன் நீதிவழங்குபவர்களைப் பாதுகாப்பதும், அவர்களுக்கு ஆதரவளிப்பதும் எமது கூட்டுப் பொறுப்பாகும். மேற்படி சம்பவம் தொடர்பில் முழுமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணைக்கு அழைப்பு விடுக்கும் தரப்புகளுடன் நானும் இணைகிறேன். உண்மை கண்டறியப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (ம-44)

## குறுகியகாலம் பாவிக்கும் பிளாஸ்ரிக்குக்கு தடை

### வர்த்தமானி இன்று

கொழும்பு, ஒக். 1

ஒருமுறை பயன்படுத்தும் மற்றும் குறுகியகால பாவனை பிளாஸ்ரிக் பொருள்களைத் தடைசெய்யும் வர்த்தமானி இன்று வெளியிடப்படவுள்ளது.

வர்த்தமானியை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் இது தொடர்பான திடீர் சோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)

## புத்தூரில் நாளை சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ்.புத்தூர் மடிஹே பஞ்சசீஹ வித்தியாலய உலக சிறுவர் தின நிகழ்வு நாளை திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் மேற்படி பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி கவிதா லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் கிராம அபிவிருத்தி அலுவலர் க.கமலநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ம-66)

## ஆட்சியைத் தக்கவைப்பதற்காக இனவாதத்தைத் தூண்டுகின்றனர்

### மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 1

ரணில் - ராஜபக்ச அரசாங்கம், தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இனவாதத்தைத் தூண்டுவது மட்டுமல்லாமல், மதவாதத்தையும் தூண்டும் என்பதும், ரணில் விக்கிரமசிங்க என்பவர் உணர்வு இல்லாத ஒரு ஜடம் என்பதும் மக்களுக்குத்தெரியும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த 75 வருடங்களாக இருந்த ஆட்சியாளர்கள் தங்களுடைய இருப்புக்காக, தங்களுடைய ஆட்சியை அமைத்துக்கொள்வதற்காக மதவாதத்தையும் இனவாதத்தையும் பயன்படுத்தி அல்லது மதக் கலவரங்களை, இனக்கலவரங்களை பிரயோகித்து அதன் மூலமாக ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் ஆட்சியைப் பிடித்துக் கொள்வதற்கும் முயற்சித்தனர். இத்தகையவர்களுக்கு காலிமுகத்திடல் போராட்டத்தின் மூலமாக சாவுமணி அடிக்கப்பட்டது. ஆனால் தற்போது இனவாதமும் மதவாதமும் மீண்டும் புத்தெழுச்சி பெற்றுவருகின்றன. காவாலிகளுக்கும், காட்டுமிராண்டிகளுக்கும் மட்டுமே இன்று இனவாதம் தேவைப்படுகின்றது - என்றார். (ம-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆக்கப்பொருள் கண்காட்சி



கிளிநொச்சி, ஒக். 1

பளை இந்திராபுரம் முன்பள்ளி சிறார்களின் ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்திராபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

முன்பள்ளி ஆசிரியை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இந்திராபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி ஆகியோர் பங்கேற்று காட்சிக் கூடத்தை ஆரம்பித்து வைத்தனர்.

நிகழ்வில் கிராம மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-9)

## கவிஞர் கருணாகரனின் 'எதிர்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 1

கவிஞர் கருணாகரன் எழுதிய 'எதிர்' நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவிலிலுள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

தாயகம் ஆசிரியர் க.தணிகாசலம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சி.கிரிசாந், வாசுதேவன், சி.விமலன் ஆகியோர் மதிப்பீட்டுரையை நிகழ்த்தவுள்ளனர். (ச)

## ஆலய ஸ்தாபகர் உருவப்படம் திரைநீக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.1

ஊரெழு பொக்கணை அருட்கதிர்காமக்கந்தன் ஆலய ஸ்தாபகர் அமரர் மாணிக்கம் பொன்னம்மா ஞாபகார்த்தமாக அவரது உருவப்படம் ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறி நூலகத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு கடந்த புதன்கிழமை அறநெறி நூலகத்தின் தலைவர் து.ஜெயதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினராக சமூக சேவையாளர் சி.சிவராசா பங்கேற்று உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்தார். (ச-66)







# சுற்றுலா தினத்தையொட்டி உற்பத்திக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 1

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வடமாகாண சுற்றுலாப் பணியகம் மற்றும் தொழிற்துறைத் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் சுற்றுலாக் கண்காட்சி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கலாசார மையத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் அ.பத்திநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பங்கேற்று கண்காட்சியை ஆரம்பித்துவைத்தார்.

கண்காட்சியில் 43 காட்சிப்படுத்தல் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. இதில் 18 கூடாரங்களில் உணவுசார்ந்த பொருள்களும், 25 கூடாரங்களில் கைவினை சார்ந்த உற்பத்திப் பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

நிகழ்வில் வடமாகாண தொழிற்துறைத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27)



## 'ஞானச்சுடர்' மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 1

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஞானச்சுடர் 308ஆவது ஆவணி மாத மலர் வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் இளைப்பாறிய அதிபர் சிறில் நடராஜா மலரின் வெளியீட்டுரை மற்றும் மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார். தொடர்ந்து வடமராட்சி அபிவிருத்தி மன்றத்தின் வேண்டுகோளுக்கமைய பனம் விதை நடுகைத் திட்டத்துக்காக சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஒரு லட்சம் ரூபா நிதி நன்கொடையாக வழங்கப்பட்டது. (ச-66)

## அரசகேசரி வரவேற்பு



யாழ்ப்பாணம், ஒக். 1

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழாவன்று ஆலயத்திலுள்ள அரசகேசரி திருவுருவச் சிலைக்கு பரிவட்டம் கட்டி வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

நீர்வேலியின் மூத்த சிவாச்சாரியார் வண. நீர்வை மணி கு. தியாகராஜகுருக்கள் ஆலய மூத்த குரு சிவஸ்ரீ சா. சோமதேவக் குருக்கள் மற்றும் குருமார் இணைந்து அரசகேசரியை வரவேற்பதுபோல் பாவனை செய்து மந்திரங்கள் ஓதி வழிபாட்டை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாண அரசவம்சத்தைச் சேர்ந்த முதலமைச்சர் அரசகேசரியால் நிறுவப்பட்ட பெருமைக்குரிய ஆலயம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உற்சாகம் பிறக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். புதிய முயற்சிக ளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். லாபம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** எதிலும் நிதானத்துடன் செயற்படவும். புதியமுயற்சிகளில்ஈடுபடவேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. செலவு செய்யவேண்டியிருக்கும்.

**கன்னி:** புதியமுயற்சிகளைகாமேற்கொள்வது நல்லது. தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணியில் முன்னேற்றம் உண்டாகும். தொல்லைகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். அனுகூலம் உண்டாகும். பிரமுகர்களின் சந்திப்பு ஆதாயம் தரும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் முடிவது இழுபறியாகு எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். சகோதர வகையில் நன்மை ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாகும். வழக்கமான பணிகளிலும் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். மாலையில் உறவினர்கள், நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## புதிய மாணவர் அனுமதி - 2023 செப்டம்பர் நுழைவு

## UNDERGRADUATE DEGREE PROGRAMMES

# COMPUTING | BUSINESS

**SLIIT NORTHERN UNI** யின் நான்கு வருட பட்டப்படிப்புகள்.
தற்போது யாழ்ப்பாணத்தில்,
கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்.

**BSc(Hons) in Information Technology Specialising in :**

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering
- Data Science

**BBA(Hons) Specialising in :**

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

**25% இற்கும் மேலான புலமை பரிசில்கள்**

**நினைவில் கொள்ள வேண்டிய திகதி**

விண்ணப்ப முடிவுத்திகதி
**5 OCT 2023**

தகுதிகாண் பரீட்சை
**7 OCT 2023**
(10:30மு.ப to 11:30மு.ப)

**மொழி மூலம்**
தமிழ், ஆங்கிலம், சிங்களம்

NORTHERN UNI
Call us now:
077 147 1471
northernuni.lk
apply@northernuni.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம் சீர்குலைந்தமையாலேயே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி

## பாதுகாப்போமென கூறுகிறார் நீதி அமைச்சர் விஜயதாஸ

**கொழும்பு, ஒக். 1**

**நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடிக்கு சட்டத்தின் ஆதிக்கம் சீர்குலைந்தமையும் காரணமாகும். இந்த சேவையை வெற்றிகரமாக மேற் கொள்வதற்கு நீதி அமைச்சினதும் அரசாங்கத்தினதும் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் என்று தெரிவித்துள்ளார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச.**

சட்டம் தொடர்பான அறிவை பொது மக்களுக்கு வழங்கும் நோக்கில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் வருடாந்தம் நடத்தப்படும் தேசிய சட்ட வாரத் திட்ட நிகழ்வு கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் சட்டத் தொழில் தொடர்பாக சாதாரண மக்கள் மத்தியில் இருந்துவரும் பிழையான கருத்தைப் போக்குவதற்காக 2006ஆம் ஆண்டில் இந்த தேசிய சட்ட வாரத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஜனநாயக சமூகத்தில் சட்டத்தின் ஆதிக்கத்தின் ஊடாக மக்கள் எதிர்பார்க்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக சட்டம் தொடர்பான அறிவு மக்களுக்கு தேவையாகும்.

அத்துடன் நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடிக்கு சட்டத்தின் ஆதிக்கம் சீர்குலைந்தமையும் காரணமாகும்.

தேசிய சட்ட வாரத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள் தற்காலத்துக்கு மிகவும் பிரயோசனமாகின்றன. இந்த சேவையை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக நீதி அமைச்சும் அரசாங்கமும் பூரண ஒத்துழைப்பை வழங்கும்- என்றார். (ச-இ)



அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கபடிப் போட்டியில் கிளிநொச்சிசிவநகர் அ.த.க.பாடசாலையின் 17 வயதுப் பெண்கள் அணி இந்த வருடமும் தங்கப்பதக்கத்தைத் தனதாக்கியுள்ளது. (ச)

# ஊழல் மோசடிகளால் நிறைந்துள்ளது நாடு!

## இழுபறியில் ஐ.எம்.எப். கடன் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 1

இந்த நாடு ஊழல் மோசடிகளால் நிறைந்துள்ளது. அரச வருவாய் இலக்குகளை அரசு அடையத் தவறியதால்,சர்வதேச நாணய நிதியம் கூட தனது இரண்டாம் கட்டக் கடன் தொகை வழங்குவதை இழுத்தடிப்புச் செய்கிறது. இந்த அரசு சரியான இலக்குகளை நோக்கி பயணப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா வித்தியாலயத்துக்கு 50 லட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை பஸ் வழங்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

'அஸ்வெசும' என்ற பெயரில் விஞ்ஞானபூர்வமற்ற, பயனற்ற திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு ஏழை மக்கள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர்.

நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலையிலும் நாட்டின் தலைவர்கள் மாதந்தோறும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்கின்றனர்.

இந்த அனைத்துப் பயணங்களுக்கான அனைத்துச்செலவுகளும் நாட்டின் 220 இலட்சம் மக்களின் பணத்திலிருந்தே செலவளிக்கப்படுகிறது.

நாட்டில் உணவுப் பாதுகாப்பு இல்லை. 3 வேளை சாப்பிட்ட மக்கள் இப்போது 2 வேளை சாப்பிடுகிறார்கள், அவ்வாறே, மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. ஆட்சியிலுள்ள ஊழல்தான் இதற்குக் காரணம். ஆட்சியாளர்களின் மிக மோசமான ஊழல் கொள்கை குறித்து சர்வதேச நாணய நிதியம் கவலை வெளியிட்டுள்ளது. அதனால் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தொகை இழுபறியிலுள்ளது - என்றார். (ச-44)

# ஆசிரிய கலாசாலையில் நூற்றாண்டுச் சிறப்புரை



யாழ்ப்பாணம், ஒக். 1

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நூற்றாண்டு சிறப்புரை தொடரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா பங்கேற்று 'பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் மகத்துவம்' எனும் விடயப்பொருளில் சிறப்புரையாற்றினார்.

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அதிதி அறிமுகவுரையை விரிவுரையாளர் வேல்.நந்தகுமார் ஆற்றினார்.

நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்ட பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலாசாலை முகாமைத்துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார். (ச-66)

# கலைஞர்களுக்கு உலருணவுப்பொதி



கிளிநொச்சி, ஒக். 1

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் 'ஏழ்மைக்கு உதவும் உறவுகள்' அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட கலைஞர்களுக்கு உலருணவுப் பொதிகள் கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வு கடந்த புதன்கிழமை 'ஏழ்மைக்கு உதவும் உறவுகளின்' அலுவலகத்தில் இடம்பெற்றது.

கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 22 கலைஞர்களுக்கே உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கா.இராசதுரை, கரைச்சிப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வே.தர்மபாலன், ஏழ்மைக்கு உதவும் உறவுகளின் இலங்கைக்கான இயக்குநர் திருமதி.உசா சசிக்குமார் மற்றும் ஆலோசகர் வே.வசந்தரூபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ச-113)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப்பேரவையின் ஏற்பாட்டில் கடந்த 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாராந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் செயலாளரும், ஆசிரியருமான சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் கலந்து கொண்டு மகாபாரதச் சொற்பொழிவு நிகழ்த்தினார். தொடர்ந்து பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த 4 வன்னிப் பிராந்திய மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு உதவியாகத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. (ய-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பச்சை மரத்துக்கே இந்நிலை நேரின்...

பச்சை மரத்துக்கே இப்படிச் செய்தால், பட்ட மரத்துக்கு என்னதான் செய்யமாட்டார்கள் (லூக்கா) என்கின்றது விவிலியம். இயேசுவுக்கே இந்த நிலை என்றால், அப்பாவிப் பொதுமக்களின் நிலை என்னாகும் என்பதுதான் லூக்கா சுட்டுகின்ற மேற்கோளின் அர்த்தம். இந்தக் கூற்றுகளின் உண்மைக்கும் – அதன் கனதித்தன்மைக்குமான சாட்சிகளாக – அதிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரான உயிர்ச்சாட்சிகளாவே ஈழத்தமிழினம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா, உயிர் அச்சுறுத்தலாலும், தீர்ப்பை மாற்றுமாறு வழங்கப்பட்ட அழுத்தங்களாலும், தான் உயிருக்கு நிகராக நேசித்த நீதிபதிப் பதவியைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேறி – வெளிநாடொன்றில் தஞ்சமடைந்ததையடுத்து தமிழர்தாயகத்தில் பதற்றநிலை பட்டவர்த்தனமாக உணரப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கூடவே இலங்கையில் நீதித்துறையின் அடுத்தகட்டப் பயணப்படுதல் எவ்வாறு இருக்கப்போகின்றது? முல்லைத்தீவில் சர்ச்சைக்குரிய விவாதக் களங்களாகக் காணப்படும் விடயதானங்களில் அடுத்து என்ன நிகழப்போகின்றது? உள்ளிட்ட கேள்விகளும் அவற்றுக்கான பதில்தேடல்களும் பொருள்கோடல்களும்தான் தமிழர்களின் இதயக்கூடுகளில் கடந்த இரண்டு நாள்களாகக் கன்றுகொண்டிருக்கின்றன.

ஏனெனில் சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் சித்தாந்தங்களுக்கு ஒரு சிம்மசொப்பனமாகத்திகழ்ந்தவர்தான் நீதிபதி ரி.சரவணராஜா. திலீபனை அஞ்சலிப்பதற்கு எதிராகப் பொலிஸார் தடைகோரிய வழக்கில், 'மரணமடைந்த பார்த்தீபன் அல்லது திலீபன் என்பவரை நினைவுகூருவது ஒவ்வொருவரது தனிப்பட்ட உரிமையாகும். உண்மையில் திலீபன் தமிழர் மனங்களில் ஒரு தியாக தீபமாக வாழ்ந்துகொண்டிருக்கின்றார். அவரை நினைவுகூருவதைத் தடைசெய்வதே அமைதியின்மையை ஏற்படுத்தும்' என்றவா்றாகவும், குருந்தூர்மலையில் தமிழர் வழிபாட்டுக்குத் தடைகோரிய வழக்கில், 'குருந்தூர்மலையில் தமிழர்கள் வழிபாடு மேற்கொள்வதற்கு ஒரு குழுவினர் எதிர்க்கின்றனர் என்பதற்காக அவர்களின் (தமிழர்களின்) வழிபாட்டுரிமையை மறுதலிக்கமுடியாது. இங்கே பிரச்சினைக்கு உரியவர்கள் வழிபாட்டுக்கு எதிர்ப்பை விடுக்கும் தரப்பினர்தான்' என்றவாறாகவும் அவர் வழங்கிய கட்டளைகளே நீதிபதி சரவணராஜா தன் கடமைகளில் எவ்வளவு நேர்த்தியாகவும் முதுகெலும்புத் தனத்துடனும் செயற்பட்டார் என்பதை மறுவிவாதமின்றி கட்டியம் செய்கின்றன.

அவருடைய தீர்ப்புகளும் கட்டளைகளும்தான் சிங்கள – பௌத்த பேரினவாதத்தைச் சினம்கொள்ள வைத்தன. தீர்ப்பை மாற்றிக்கூறும்படி நிர்ப்பந்திக்கும் அளவுக்கு பேரினவாதம் கீழிறங்கியது. எனில், இந்த அழுத்தங்கள் இனியும் தொடரத்தான் போகின்றன. ஆதலால், முல்லைத்தீவு குருந்தூர்மலை விவகாரமாக இருக்கட்டும், முல்லைத்தீவில் முன்னெடுக்கப்படும் அஞ்சலிப்பு நிகழ்வுகளாக இருக்கட்டும் இவற்றுக்கு எதிராக நீதியின் தராசு எவ்வாறிருக்கப்போகின்றது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இன்றில்லை. ஏனெனில் பேரினவாதம் இப்போது கைவைத்திருப்பது நீதித்துறையில் அதன் கட்டமைப்பில்.

ஓர் இரையை இறுகப்பற்றி அதை கொஞ்சம்கொஞ்சமாக ஆட்கொண்டு ஆக்கிரமிக்கும் மலைப்பாம்புபோல், நாளுக்குநாள் நீதித்துறையின் மீதான தன்பிடியை சிங்கள – பௌத்த பேரினவாதம் இறுக்கிக்கொண்டிருக்கின்றது. இலங்கையில் நீதியின் நாள்கள் எண்ணப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தமிழர்களின் அபிலாஷைகள், பிராந்திய அரசியலுக்குள்ளும் சர்வதேச நகர்வுகளுக்குள்ளும் பகடையாக்கப்பட்டிருக்கும் தற்காலச்சூழலில், நீதிமன்றங்கள்தான் எமக்கு தொலைதூர விடிவெள்ளியாகத் தென்பட்டன. ஆதலால் நீதித்துறையின் சுயாதீன இழப்பும், தமிழர்களின் உரிமையிழப்பும் ஏறக்குறைய ஒன்றுதான்.

நாளொரு நல்வார்த்தை

ஒரு துளி பேனா மை
பத்து இலட்சம் பேரை
சிந்திக்க வைக்கும்.

– பைரன்



# மொழி எல்லாவற்றுக்கும் மிகவும் முக்கியமானதே

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 1**

**மொழி என்பது பொருளாதாரத்தையும், வளர்ச்சியையும் நிலைத்தன்மையையும் உருவாக்குகின்ற விடயமாக இருக்கின்றது என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

சூரிய நிறுவகத்தின் அனுசரணையில் இரண்டாவது மொழிக் கற்கையை நிறைவு செய்த மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் சுதுமலை பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் வைத்து சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வானது, கற்கைநெறியின் வடக்கு மாகாண இணைப்பாளர் தே.பிரேமராஜா தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையைப் பொறுத்தவரை மூவின மக்கள் வாழுகின்றோம். இரண்டு மொழிகள் மட்டும்தான் இருக்கின்றன. இருந்தாலும் அதனூடாக நாங்கள் பல்வேறு சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்திருக்கின்றோம். தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழியையும், சிங்கள மாணவர்களுக்கு தமிழ்மொழியையும் கற்பிக்கின்ற செயற்பாடானது இன்றியமையாதது - என்றார். (ஓ-27)

# தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ள சிங்களவர்கள் முன்வரவேண்டும்

### யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 1
தமிழர்கள் சிங்கள மொழிப்புலமையை வளர்ப்பதுபோல, சிங்களவர்களும் தமிழ்மொழியையும், தமிழ் மக்களுடைய பண்பாடு, கலாசாரம் என்பவற்றையும் கற்றுக்கொள்ள முன்வர வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எங்களுடைய நாட்டில் இரண்டு மொழி பேசும் சமூகங்கள்தான் உள்ளன. இந்த இரு மொழிகளையும் மையப்படுத்திய பல்வேறுபட்ட பிணக்குகள்தான் இந்த நாட்டின் அவலத்துக்குக் காரணமாக உள்ளன. சுமார் 60 - 70 வருடங்களுக்குப் பின்னர் இரு மொழிப்புலமையை வளர்த்துக்கொள்ள இந்த முயற்சி யில் இறங்கியுள்ளோம். தமிழர்களில், கிராமங்களில் இருப்பவர்கள்கூட இன்று சிங்களம் பேசுகின்றனர். சிலர் அந்தத் திறனைக் கொண்டிருக்கின்றார்கள்.
சிங்கள மக்கள் தமிழைக் கற்றால்தான் இந்த முயற்சி வெற்றிபெறும். தமிழர்கள் சிங்க ளத்தைக் கற்பதற்கு மேலாக சிங்களவர்கள் தமிழர்களது மொழி, கலாசாரம் பண்பாட்டை மதிக்க வேண்டும். இன்று இரண்டாம் மொழியறிவு தவிர்க்க முடியாதது. அதைநோக்கி எம்மை நாம் வளர்த்துக்கொள்ள வளப்படுத்திக்கொள்ளவேண்டும் - என்றார். (அ-ம-125)

நாளை 02.10.2023
திங்கட்கிழமை
புரட்டாதி 15

சுபநேரம் : 12.02 - 01.32
ராகுகாலம் : 07.32 - 09.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

பில்கிளாக், பொதியிடல், உதவியாளர், மாவறுத்தல், மில் அனுபவம் உள்ளவர் (1500/=) என்பவற்றிற்கு பெண் ஊழியர்கள் தேவை.
தொடர்பு: பிருந்தா மில், 184,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tele: 077 174 6101

## காணி விற்பனைக்கு

யாழ். மணிக்கூட்டு வீதியில்
(நீராவியடிப் பிள்ளையார் கோயில்ப் பக்கம்)
2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
077 710 2692

## வாடகைக்கு

சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகாமையில் 65x25 அடியில் சகல வசதியுடன் கூடிய கடை, அலுவலகம், கிளினிக், ஸ்ரோராகப் பாவிக்கக் கூடிய இடம் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 075 6967 431

## பெண் வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும்தனியார் நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு பெண் வேலை ஆட்கள் தேவைப் படுகின்றனர்.

1. வரவேற்பாளர்
2. அலுவலக உதவியாளர்

தொடர்பு இலக்கம்: 077 353 3809
075 920 4651
35, Palaly Road, Jaffna.

## ஆய்வக உதவியாளர் தேவை

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கிவரும் எண்ணை உற்பத்தி தொழிற்சாலையான Venkadeshwara Agro Industry (PVT) Ltd க்கு ஆய்வக உதவியாளர் தேவை.
ஆர்வம் உள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை
suganthon@gmail.com
எனும் மின்னஞ்சலுக்கு சமர்ப்பிக்கவும்.

## பணியாளர்கள் தேவை

திருநெல்வேலி மற்றும் கோண்டாவிலில்
இயங்கும் Food City க்கு பின்வரும்
வேலையாள்கள் தேவை

- Account Assistant
- Data Entry
- Packing
- Cashier (Male /Female)
- Store Keeper
- Sales Man

10 Km க்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது
- சுயவிபரக்கோவையினை

Northwayfamilymart18@gmail.com
என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்
077 764 7645


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 • 01 • 1952 — உதிர்வு 12 • 10 • 2022

### அமரர் சறோஜினிதேவி நாகேந்திரன்

திதி: 01.10.2023

ஓராண்டு ஆனதம்மா
உங்கள் நினைவுகள் கனக்கின்றன
வாழும் நாள் வரை எம்
வாழ்வுக்காய் உழைத்து நின்று
தாழ்விலாப் பெருமைகள்
தரணியில் சேர்த்து
இடரெல்லாம் தாம் சுமந்து
இன்பங்கள் நல்கிட்ட
எமது குடும்பத் தலைவியை
என்றென்றும் நினைத்திருப்போம்.
அம்மாவின் ஆத்மா இறைபதம் சரணடைய
பிரார்த்திப்போமாக.

'நேசவாசா'
மீசாலை வடக்கு, கொடிகாமம்.
077 2249 523

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரமனேநம

## மரண அறிவித்தல்



அன்னையின் மடியில் 25 • 01 • 1946 — அம்பாளின் அடியில் 19 • 09 • 2023

### திருச்செல்வம் உருத்திரமணிதேவி

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் உருத்திரமணிதேவி 19.09.2023 செவ்வாய்க் கிழமை கனடாவில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஸ்ரீமான் துரையப்பா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், திருச்செல்வம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, பரமானந்தம், திருநாவுக்கரசு, சண்முகராசா, கோபாலகிருஷ்ணன், தையல்நாயகி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, வேதவல்லி, விவேகவதி மற்றும் சிவபாகியம், இன்பஜோதி, நாகேஸ்வரி, மாகலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், தவமலர், பிரகாஷ் (கனடா), கோகிலதாஸ் (V.T.A. யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும், கோகுலன், தனுசியா (கனடா), கவிதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சேயோன், வெங்கடேஸ், தரணி, ஆரணி (கனடா), பானுஜன், ஜானுகா, ரனுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2023) ஞாயிற்றுக்கிழமை 8.00 மணிக்கு (கனடிய நேரம்) 384 Finley Avenue, Ajax, Lis 2E3 இடம்பெறும்.

அன்றையதினம் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலி நிகழ்வும் இடம்பெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இல.34, கேசாவில் பிள்ளையார் வீதி,
வண். வட மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
021 222 9096, 077 617 6563

(cs.26409) (N.1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 • 11 • 1972 — மறைவு 30 • 09 • 2023

### திருமதி கோமதி யோகலிங்கம்

வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இராசவீதி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோமதி யோகலிங்கம் நேற்று (30.09.2023) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் கோபாலசிங்கம் (சின்னக்கிளி) புவனேஸ்வரி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், யோகலிங்கத்தின் அன்பு மனைவியும், கோகுலதாஸ், ஜெகதாஸ், பானுமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வினோஜன், கஜீபன், மிதுனன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிமலா, காலஞ்சென்ற ரூபதாஸ் மற்றும் கருணேஸ்வரி, வரதலட்சுமி, காலஞ்சென்ற மகேந்திரலிங்கம் மற்றும் இராசலட்சுமி, பத்மாவதி, கணேசலிங்கம், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும், லோகேஸ்வரி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி திணைக்களம் - வடமாகாணம்), சந்திரலிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர் வலிகாமம் கல்வி வலயம்), திலகேஸ்வரி (ஆசிரியர் - கோப்பாய் நாவலர் வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனியும், சரண், யுவன் ஆகியோரின் பெரியம்மாவும், மதுசாந், பவகாந் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசவீதி,
கோப்பாய் தெற்கு.
077 839 1103

(cs.52388) (N.1)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைக்கு ஆட்கள் தேவை

உற்பத்தி மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள புகழ்பெற்ற
**MOGRILLS BRAND** உணவுப் பொருட்களை
வடமாகாணத்தில் விநியோகிப்பதற்கு
**Driver, SalesRepresentative** தேவை.

**Driver**
- வயது 25 – 50
- சிறந்த தொடர்பாடல் திறன்
- 2 வருட அனுபவம்
- செல்லுபடியாகும் மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமம்

**Sales Representative**
- வயது 22 – 40
- க.பொ.த உயர்தரப் பரீட்சையில் எளிய சித்தி
- சிறந்த தொடர்பாடல் திறன்
- 2 வருட அனுபவம்
- செல்லுபடியாகும் மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமம்

சமீபத்தில் எடுத்த புகைப்படத்துடன் உங்கள் CV ஐ mgm@mgm.lk க்கு அனுப்பவும்.
தொடர்புக்கு 0777348883

(cs.52316)(N - 1)

# வளர்மதியாள் வாழ்த்துகிறாள்

எமது கழக உறுப்பினர்கள்
திருமதி வாசுகி சுரேஸ்குமார் தம்பதிகளின்
**"யாழ். மதர் கெயார்"**
**(YARL MOTHER CARE)**
**வைத்திய நிறுவனமானது**
**09.09.2013 இல்**
ஆரம்பிக்கப்பட்டு கடந்த 10 ஆண்டுகளாக
எமது மண்ணில் மக்களுக்கு ஆற்றிவரும் சேவையை பாராட்டுவதுடன்
மென்மேலும் பல்லாண்டுகள் வைத்தியதுறையில் தனது சேவையை
மக்களுக்கு தொடர்ந்திட வாழ்த்துகின்றோம்.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகமும்
சனசமூக நிலையமும்
&
வளர்மதி நிறைவாழ்வகம்
சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.

(cs.52321)(N - 1)

நெஞ்சை விட்டகலாது
# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர்
## ஆலாலசுந்தரம் முருகானந்தன்



அதிசயமாக எம்மை விட்டு
பிரிந்த அப்பாவே!
ஊரே உங்களைப் பார்த்து
- மெய்சிலிர்க்கும்
வாழ்வு ஏனோ முடிந்துபோனது
உதவியென்றால் உங்கள் கரம்
அரவணைக்கும் என்ற
- உண்மை
உறங்கிப் போனதோ
மற்றவன் எப்படியும் வாழட்டும்
- என்று
எப்போதும் இருந்ததில்லை
இப்படி வாழுங்கள் என்று
இதமாய் ஆறுதல் தரும்
ஈராண்டு உங்களைப்
பிரிந்து வாழும் எமக்கு
எங்கேயப்பா - ஆறுதல்
ஆண்டவன் பொன்னடியில்
ஆராத இன்பமுடன் நீங்கள்
இருக்க என்றும்
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 18.06.1967 மறைவு 22.09.2021
திதி: அபரபக்க துதியை

நினைவுகளுடன்:
குடும்பத்தினர்

(cs.52403)(N-1)


# 'எங்கட புத்தகங்கள்' இல்லம் இன்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஒக். 1

'எங்கட புத்தகங்கள்' இல்லம் இன்று ஞாயிற்றுக்கிழமை "இல.6, திருவடி நிழல், அம்மன் வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. மூத்த எழுத்தாளர் அ.யேசுராசா கலந்து கொண்டு 'எங்கட புத்தகங்கள்' இல்லத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார். (ம-66)


# பெண் பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில்
ஐந்து வருடங்களிற்கு மேலாக
இயங்கிவருகின்ற
" வல்வை முதியோர் இல்லத்திற்கு "
சமையல் வேலை மற்றும்
முதியோர் பராமரிப்பில்
அனுபவமுள்ள பெண்
பராமரிப்பாளர் தேவை.

தொடர்புகளுக்கு: 077 810 6857
077 154 2067
021 226 5551

(N.1)

# மரண அறிவித்தல்

## சுப்பையா குமாரசாமி
(முன்னாள் தலைவர், தாவடி வடக்கு விவசாய சம்மேளனம்)



சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும், தவாடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா குமாரசாமி (28.09.2023) வியாழக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 04.01.1929 மறைவு 28.09.2023

73, வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்
077 773 3790
077 979 7448

(cs.52320) (N.1)


# கடையிற் சுவாமி குருபூசை தினம்

யாழ், ஒக். 1

ஈழத்துச் சித்தர் பரம்பரையின் ஆரம்பமாக விளங்கும் கடையிற் சுவாமிகளின் 132 ஆவது குருபூசை தின நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நீராவியடியிலுள்ள கடையிற் சுவாமிகளின் சமாதிச் சிவாலயத்தில் நடைபெற்றது. சிறிய தேரில் கடையிற் சுவாமிகள் அடியவர்கள் புடைசூழ உள்வீதி உலா வந்தார். தொடர்ந்து மாகேஸ்வர பூசை இடம்பெற்றது. (ச-66)




# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 12 . 1939



மறைவு 27 . 09 . 2023

## திரு.செல்லத்துரை சத்தியமூர்த்தி

(ஸ்தாபகர் - மீனாட்சி வர்த்தக கல்லூரி - கொட்டடி, யாழ். கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி முன்னாள் விரிவுரையாளர், நல்லை ஆதின முன்னாள் மேலாளர்)

கொட்டடி சீனிவாசகம் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சத்தியமூர்த்தி கடந்த (27.09.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை செல்லக்கண்ணு தம்பதியரின் மகனும், நவமணியின் கணவரும், கனடாவைச் சேர்ந்த ஆனந்தமூர்த்தி, அங்கையற்கண்ணி, மருதாசலமூர்த்தி, இலட்சுமிநாராயினி ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இன்று (01.10.2023) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs 52332) (N-1)

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

இயக்கச்சி சந்தியிலிருந்து 3 km Reecha Farm Road இல் 40 ஏக்கர் கஜு தோட்டம் ஏனைய பயன்தரு மரங்களுடனான காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவை இல்லை)

(cs 52297) (N-1)

**077 775 0308, 075 775 0308**

## மணமகள் தேவை

யாழ். இந்து சமயத்தைச் சேர்ந்த (V) அவுஸ்ரேலியாவில் எஞ்சினியராக கடமைபுரியும் 1976 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு பெற்றோர் அழகிய படித்த மணமகளை (உள்நாடு / வெளிநாடு) எதிர்பார்க்கின்றனர்.

**077 265 9883**

## Top Atlaais

A/C, Fridge போன்ற குளிர்சாதன உபகரணங்கள். உத்தரவாதத்துடன் திருத்தி கொடுக்கப்படும். Home Wiring, plumbing செய்து கொடுக்கப்படும்.

(cs 52323) (N-1)

**076 354 6157**

## திருமண சேவை

வெளிநாடு உள்நாடு - யாழ். Colombo - A/L - பட்டப்படிப்பு வரை அரசாங்க உத்தியோகம், தனியார் துறை, Doctors, Engineers, Accountants மணமக்களின் திருமண குறிப்புகள் (சூரியனும் செவ்வாயும் சேர்ந்திருக்கும் ஜாதகங்கள் RC / Divorcees/ Vegetarians ஏராள முண்டு www.thampoolam.com (தாம்பூலம் சேவை) No. 792/2, 1/1, Aluthmawatha Road, Colombo - 15

**076 566 5845**

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு, பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் (V), 1982 இல் பிறந்த, கேட்டை 2 ஆம் பாதம். பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு உயர் கல்வி கற்ற அல்லது அரச பதவி நிலை பதவியில் உள்ள மணமகள் தேவை.

(cs 52346) (N-1)

தொடர்பு: "குணவதி திருமணசேவை"
**070 607 6902**
**077 307 6902**

## ரோமானியா வேலைவாய்ப்பு

| தொழில் நிலை | எண்ணிக்கை | சம்பளம் |
|---|---|---|
| மதுக்கடைக்காரர் (BARTENDER) | 20 | $ 600 |
| சமையல்காரர் COMMI COOK | 07 | $ 550 |
| சமையல்காரர் COOK | 16 | $ 400 |
| கம்பி பொருத்துனர் | 10 | $ 550 |
| சமையலறை உதவியாளர் | 30 | $ 400 |
| பொது பணியாள் - WAITER - GENERAL | 43 | $ 600 |

Subject To Change According To The Exchange Rate
AL524/0016/22 **1$ = Rs. 359.34**
AL524/Advt/07/23

விதிமுறைகள் & நிபந்தனை:-

- இலவச உணவு அலவன்ஸ்
- தங்குமிடம், போக்குவரத்து , மருத்துவ வசதி இலவசம்
- 3 வருட ஒப்பந்த காலம், வருடத்திற்கு 21 நாட்கள் விடுமுறை
- 3 மாத தகுதிகாண் காலம்
- வேலை நாளொன்றுக்கு 8 மணித்தியாலம், வாரத்திற்கு 48 மணித்தியாலம்
- 3 வருடங்களின் பின் ஒப்பந்தகாலம் பூர்த்தியாகி நாடுதிரும்ப விமான டிக்கட் இலவசம்
- ஏனைய அனைத்து விதிமுறைகள் & நிபந்தனைகள் ரோமானிய தொழிலாளர் சட்டத்திற்கு உட்பட்டது.

உங்கள் விண்ணப்பப்படிவத்தை (CV) உடன் அனுப்பிவையுங்கள்
cvdirectlines@gmail.com I vacancy@directlines.lk
OR அழையுங்கள் **0742071769 I 0775522094**
**0112 582879 I 0112 360656**

**Direct Lines (Pvt) Ltd.**
( 38 YEARS OF EXCELLENCE IN SERVICE )
Manpower & Recruitment Consultancy
SLBFE LIC NO. 524
379, 2nd Floor, Galle Road, Colombo - 06.
For details refer our website: www.directlines.lk

## அரியாலையில் குருதிக்கொடை

யாழ், ஒக். 1

அமரர் அபிஷனின் முதலாமாண்டு ஞாபகார்த்தமாக சக நண்பர்கள் இணைந்து ஏற்பாடு செய்த குருதிக் கொடை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை அரியாலை சரஸ்வதி சன சமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. குருதிக்கொடையாளர்கள் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(ச-66)

# காணி விற்பனைக்கு

வவுனியா - பண்டாரிகுளம் அம்மன் கோவிலுக்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

- வீட்டுத் தொகுதிக்கும் - மருத்துவ மனைக்கும் பொருத்தமான இடம்
- புகையிரத நிலையம் - வங்கிகள் - பஸ்டான்ட், மார்கட் என்பன மிக அருகாமையில்.

**077 755 1193**

## பகிரங்க அறிவித்தல்

சைவபரிபாலன சபைக்கு சொந்தமான காணிகளான இறாவளைவயல், கோயிலாக்கண்டி (நெற்பரப்பு 550) மற்றும் சிதம்பர சித்தி விநாயகர், மறவன்புலோ அயற் காணிகளான கொங்கமாவடி, தாராமோட்டை, பண்டிக்குளம், விளாப்பு (நெற்பரப்பு 705) என்பவற்றில் குத்தகை அடிப்படையில் பயிர்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கான பகிரங்க அறிவித்தல்.

சைவபரிபாலன சபை நிர்வாகத்தினரால் 15-10-2023 அன்று காலை 9.00மணிக்கு இல.66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் குத்தகைதாரர்களுடனான விசேட கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. குறித்த கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட இருப்பதால் குறிப்பிட்ட காணிகளில் குத்தகை அடிப்படையில் பயிர்செய்பவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**செயலாளர்,**
**சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்.**

(cs. ) ( 52304N.1)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை பொறியியற்பீடம், அறிவியல்நகர், கிளிநொச்சி களனி சக்தி மின்னிணைப்புத் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி

KELANI CABLES

மின்னிணைப்புத் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறியினை களனி கேபிள்ஸின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியற்பீடம் தமிழ் மொழியில் நடாத்த திட்டமிட்டுள்ளது. **இக்கற்கை நெறியின் பிரதான நோக்கம் மின்னிணைப்பு செயல்முறை தொடர்பான தத்துவ விளக்கங்களை வழங்குவது.** எனவே மின்னியல் தொழில்நுட்ப துறையில் முன்னனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

காலம் : ஒரு வருடம் (பகுதிநேரம்: மாதத்தின் முதலாவது சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்)

தெரிவு : நேர்முகப்பரீட்சை மூலம்

இடம் : பொறியியற்பீடம், அறிவியல்நகர், கிளிநொச்சி

மேற்படி கற்கைநெறியினை பயில்வதற்காக பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 16-10-2023 வரை ஏற்றுக்கொள்ளப்படும். பொருத்தமான விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரக்கோவையினை கீழுள்ள முகவரிக்கு விண்ணப்ப முடிவு திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவேண்டும் அல்லது நேரில் ஒப்படைக்கவும் முடியும் (சுயவிபரக்கோவையில் மின்னிணைப்பு துறையில் தொழில் செய்த சேவைக்காலம், சேவை விபரம் என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்).

ஒருங்கிணைப்பாளர்
"மின்னிணைப்பு தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி"
மின் மற்றும் மின்னணு பொறியியற்துறை,
பொறியியற்பீடம்,
அறிவியல்நகர்,
கிளிநொச்சி

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"மின்னிணைப்பு தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி"** எனக்குறிப்பிடுதல் வேண்டும். தெளிவற்ற மற்றும் விண்ணப்ப முடிவு திகதிக்கு பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**01.10.2023**

## PSB Dental Care

PSB DENTAL CARE

சேமியுங்கள் உங்கள்நேரம், பணம், புன்னகை!
உங்கள் புன்னகையையும் தன்னம்பிக்கையையும்பேண பற்கள் தேவை.

- குழந்தைகளுக்கான பற்சிகிச்சை (Pediatric Dental Treatments)
- பல் வெண்மைப்படுத்தல் (Bleaching)
- முரசு வைத்தியம் (Gum Treatments)
- பற்கூச்ச வைத்தியம் (Tooth Sensitivity Treatment)
- பல் பிடுங்குதல் (Tooth Extraction)
- பற் சீரமைத்தல் (Teeth Alignment / Clip Treatment)
- பல்லில் அழகுக்கல் ஒட்டுதல் (Tooth Jewel)
- பல் கட்டுதல் (Denture Making)
- பல் கவர் போடுதல் (Crown & Bridge)
- பல் வேர் சிகிச்சை (Root Canal Treatment)
- பற்சுத்தம் செய்தல் (Cleaning & Polishing)
- பல் உடைவை சரிசெய்தல் (Tooth Fracture Management)
- முரசு வளர்வதற்கான வைத்தியம் (Gum Surgeries)
- பல் நிறத்தில் அடைத்தல் (Tooth Coloured Fillings)
- பல் தொடர்பான அனைத்து சிகிச்சைகளும் (All Dental Treatments)

**PSB Dental Care**
**4. பழைய பொலிஸ் நிலைய வீதி, சாவகச்சேரி**
தொடர்புகளுக்கு / முற்பதிவுகளுக்கு:
வாரநாட்கள், சனி: மாலை 4.00-7.00
வெள்ளி விடுமுறை ஞாயிறு வேலை நாள்
**0762523486**
psbalan@live.com

(cr.40682) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NORTHERN UNI | SLIIT ACADEMY | University of Bedfordshire

உலக நாடுகளின் வேலைவாய்ப்பிற்கான முதல் தடம்

## உங்களது க.பொ.த உயர் தர பரீட்சையின் பிறகு

Northernuni யுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணை குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட University of Bedforshire இன் பல தரப்பட்ட இளங்கலை பட்டப்படிப்பினை நீங்கள் விரும்பியவாறு யாழ்பாணத்தில் தொடரலாம்.



கா.பொ.த உயர் தர பரீட்சையில் ஒன்று அல்லது இரண்டு தேர்ச்சிகளுடன், தகவல் தொழில்நுட்பம் அல்லது வணிகத்தில் வெளிநாட்டு பட்டப்படிப்பினை ஒன்றை நீங்கள் பெறலாம்.

**2023 செப்டம்பர் உள்வாங்கல்.**

பட்டப்படிப்பு நிகழ்ச்சி திட்டங்கள் 3 வருடங்கள்

- BSc (Hons) Computer Science and Software Engineering
- BSc (Hons) Computer Networking
- BA (Hons) Business Administration

குறைந்த பட்ச தகுதிகள்

**IT**
ஒரே அமர்வில் பெறப்பட்ட க.பொ.த உயர்தர பரீட்சையில் குறைந்த பட்ச்சம் ஒரு S தேர்ச்சி.

**Business**
ஒரே அமர்வில் பெறப்பட்ட க.பொ.த உயர்தர பரீட்சையில் குறைந்த பட்ச்சம் ஒரு S தேர்ச்சி.

தகுதி பரீட்சை
**21 OCT 2023**
(10:30 மு.ப to 11:30 மு.ப)

மேலும் விவரங்களுக்கு : 077 147 1471

northernuni.lk | apply@northernuni.lk | 239, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம், இலங்கை



**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும்.
இழுத்து பதிக்க ஒரு சதுர அடி - 85 ரூபா
077 334 1281



## திருவாசகம் முதியோர் இல்லம்
இலக்கம் 87, 89 செட்டித்தெரு நல்லூர் கோவிலுக்கு அருகாமையில்
**தாய் தந்தையருக்கான**
சிறந்த பராமரிப்பு சேவையினை வழங்கிக்கொண்டிருக்கின்றோம். நவீன வசதிகள் கொண்ட அறைகள், சிறந்த தாதியர் பராமரிப்புச் சேவை, உணவு, தங்குமிட வசதி உள்ளது.
தேவையானனோர் எம்மை தொடர்புகொள்ளவும்.
**077 959 3108**
(cs.52313) (N.1)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி CACM தேவாலயத்தில் 25 கர்பிணித் தாய்மாருக்கு சத்துணவு வழங்கப்பட்டது.
சர்வதேச லயன்ஸ் கழக 306 B1 மாவட்டத்தின் மாவட்ட பிரதம இணைப்பாளர் (DISTRICT CHIEF COORDINATORE (CHLDE CARE & NUTRITION) அவர்களால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306B1 மாவட்ட ஆளுநர் Lion placidus peter PMJF கலந்து சிறப்பித்தார்.

**MANIPAY CITY LIONS CLUB**
(cs.52328) (N.1)


# ருமேனியாவில் வேலை வாய்ப்புகள்



- சம்பளம் 500 யூரோக்கள் மற்றும் அதற்கு மேல் வழங்கப்படும்
- இடம் - Bucharest - ருமேனியா
- ஐரோப்பிய வாழ்க்கை முறை
- உணவு மற்றும் தங்குமிட வசதி இலவசம்
- மருத்துவ வசதிகள் இலவசம்

AL/3507/0001/23

- கட்டுமானத் துறையில் வேலை வாய்ப்புகள் (மேசன், தச்சகர்கள், கம்பி பொருத்துபவர்கள், பிளம்பர்கள்)
- பைக் ரைடர் (Bike Riders)
- சுத்தம் செய்பவர்கள் (பெண்)
- சமையல் உதவியாளர்
- கட்டுமான தொழிலாளர்
- தொழிலாளர்கள் (பொது வேலைகள்)

BI RECRUITMENT
Licence No 3507

**BI RECRUITMENT**
0112 576 656 | 0776 929 773
இல. 250/3/06, 3வது மாடி, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, லிபர்ட்டி ப்ளாஸா.
www.birecruits.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Hotel Choy's Water Front Negombo
Luxury Rooms near Colombo Airport
(15 minutes drive away),
31 custom house road Negombo
For reservation +94 31 2222807
+94 777 352863
choyswaterfront@hotmail.com





# யாழுக்கு படையெடுக்கும் தென்பகுதி சுற்றுலாவிகள்

யாழ்ப்பாணம், ஓக்.1

கடந்த வார இறுதியில் நான்கு நாள்கள் பொதுவிடுமுறையாக இருந்ததால், யாழ்ப்பாணத்துக்கு தென்பகுதியில் இருந்து பெருமளவிலான சுற்றுலாப் பயணிகள் வந்ததை அவதானிக்க முடிந்தது. நயினாதீவுக்கு நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 30 ஆயிரத்துக்கும் அதிக மாணவர்கள் பயணித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. அதனால் குறிகாட்டுவான் இறங்குதுறையில் வாகனங்களின் வரிசை நீண்ட தூரம் காணப்பட்டது. (எ-19)





## பாரம்பரியத்தை மீட்க கலைஞர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஓக். 1

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் தெல்லிப்பழைப் பிரதேசசெயலகம் ஏற்பாடு செய்த பிரதேச கலைஞர் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தெல்லிப்பழைப் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. பிரதேசத்தின் பாரம்பரிய கலைகளை வளர்த்தெடுக்கும் நோக்கில் இந்த ஒன்றுகூடல் நடத்தப்பட்டது. (ச-66)



## கோப்பாயில் ஆணின் சடலம்: சந்தேகநபர்களுக்கு மறியல்!

கோப்பாய்ப் பகுதியில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களின் விளக்கமறியல் நீதிமன்றத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் கோப்பாய்ப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து க.மகேந்திரம் (வயது-52) என்பவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். சிறுமி ஒருவரிடம் தவறாக நடந்துகொண்டமையால் சிறுமியின் உறவினர்கள் [illegible] சென்று தாக்கியமையாலேயே அவர் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஆறு பேர் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு கடந்த புதன்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில் அவர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 10ஆம் திகதிவரை நீடித்தது நீதிமன்றம். (எ-26)



## புவேந்தன் முன்பள்ளி சிறுவர்தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக். 1

சாவகச்சேரி புவேந்தன் முன்பள்ளியின் சர்வதேச சிறுவர்தின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளித் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளர் பா.ஜெயந்தன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2023 உலக சிறுவர் தினத்தில் பிறக்கும் அனைத்து குழந்தைகளின் பெற்றோருக்கும்



## ஒரு மில்லியன் ரூபாய் ஆயுள் காப்புறுதி இலவசம்

Company Registration Number - PB 289

எமது நாட்டுப் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும்

இலங்கையின் Sure இன்ஷூரன்ஸ்

வழங்கும் மற்றுமொரு சமூகச் சேவை.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Sri Lanka Insurance

www.srilankainsurance.com

மேலதிக தகவல்களுக்கு அருகில் உள்ள ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கிளையை நாடவும் அல்லது 0112 357 357 க்கு அழைக்கவும்.

SLIC

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ்

தந்தையும் தாயும் போன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய விழாவும் புலவரகம் திறப்பும்



யாழ்., ஒக். 1

இலக்கிய மாதத்தை முன்னிட்டு இலக்கிய விழாவும் சுன்னாகம் குமாரசாமிப் புலவரின் எழுத்தாக்கங்களை உள்ளடக்கிய புலவரகம் சேகரிப்புக் கூடத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும் சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றன.

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் செயலாளர் திருமதி சாரதா உருத்திரசம்பவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக அமெரிக்க சிக்காக்கோ தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், எழுத்தாளருமான செ.சண்முக பாஸ்கரன் பங்கேற்றார். சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலைப் பிரதி அதிபர் சிவஸ்ரீ பிரணபார்த்திஹர சர்மா கலந்துகொண்டார்.

நிகழ்வில் இணுவைத் தமிழ்ச் சங்கத்தினரின் 'இன்னும் துயிலுதியோ?' எனும் தலைப்பிலான கவியரங்கு இடம்பெற்றது. இந்தக் கவியரங்கு திட்டமிட்ட சிங்கள - பௌத்த மயமாக்கல், இலங்கையின் பொருளாதார நிலைமை, இளையோரின் நிலை, பண்பாடு உள்ளிட்ட சமகால அரசியல், சமூக விடயங்களைப் பேசுபொருளாகக் கொண்டமைந்திருந்தது. (ச-66)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு பிரம்படி வீதியில் ஆடியபாதம் வீதியில் இருந்து 50m தொலைவில் 2 பரப்பும் 1.88 குழியும் 12 அடி பாதையுடன் மற்றும் சுற்றுமதிலுடன் கூடிய சற்சதுர காணி விற்பனைக்குண்டு.

- நல்ல சூழல்
- நல்ல நன்னீர் ஊற்று
- மேட்டு நிலம்
- யாழ். மருந்து பீடம் (700m)
- K.K.S. வீதி (750m)
- கொக்குவில் புகையிரத நிலையம் (600m)

074 324 1952, 075 054 4274

(cs 552317) (N.I.)

## வேலைக்கு ஆள் தேவை

பிள்ளைகளை பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை.

தொடர்பு: 074 179 3394

## காணி விற்பனைக்கு

யாழ். இந்து கல்லூரி மிக அருகில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 4 666 412

## மணமகன் தேவை

1989 இல் பிறந்த ரேவதி நட்சத்திரமுடைய மணமகளுக்கு (கனடா).
கனடா PR உள்ள பட்டதாரி மணமகன் தேவை

077 520 7999

## விற்பனைக்கு

ஊர் சேவல் 50, விறாத்து குஞ்சுகள் 100 மற்றும் 7 ஊர் கிடாய்கள் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு: 077 3973 166

## Office Clerk தேவை

தமிழ் Typing, Computer அறிவுள்ள (பெண்) அலுவலர் தேவை.

குறிப்பு:- Jaffna town கிட்ட வசிப்பவர் விரும்பத் தக்கது. T.P: 076 578 9372

E-mail: lowoff0506@gmail.com

## வீட்டு வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைக்கு ஆள் தேவை. (பெண்)

சம்பளம் : 30,000/=

அருகில் உள்ளோர் விரும்பத் தக்கது.

தொடர்பு: 0777 898 862


அமரர் தாமு வீரசிங்கம் (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின்
முதலாண்டு நினைவுப் பகிர்வும்
" வீரசிங்கம் ஒரு பன்முகப் பார்வை"
நூல் வெளியீடும்

காலம் 2023.10.01 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி
இடம் : கௌரிகோட்டம், அல்வாய்

தலைமை
திரு க.பரணீதரன்
(ஆசிரியர், ஜீவநதி, கடல், நாங்கள்)




வெளியீட்டுரை
திரு இ.இராஜேஸ்கண்ணன்
(விரிவுரையாளர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்)

நினைவுப்பகிர்வுகள்
கலாநிதி மா.கருணாநிதி
(ஓய்வு நிலை பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம்)
கலாநிதி த.கலாமணி
(ஓய்வுநிலை சிரேஷ்ர விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்ககழகம்)
திரு சி.வன்னியகுலம்
(ஓய்வுநிலை பணிப்பாளர், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்)
திரு செ.சுதாகரன்
(அதிபர், சுழிபுரம் வடக்கு யா/ ஆறுமுக வித்தியாலயம்)
திரு வே. சிவராஜலிங்கம்
(ஓய்வுநிலை, பிரதேசசபை செயலர், சிங்களமொழி போதனாசிரியர்)
திரு பி.கிருஷ்ணானந்தன்
(ஓய்வுநிலை, வங்கி முகாமையாளர், மக்கள் வங்கி)
திரு க.வரதவேல்
(ஓய்வு நிலை, உத்தியோகத்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
திரு ஐ.குமரதாஸன்
(உப அதிபர், யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்)
திரு தி.வரதராஜன்
(ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர்)
திரு.வி.செந்தூரன்
(பீடாதிபதி, தகவற்தொழில்நுட்பம், வவுனியா பல்கலைக்கழகம்
திரு க. தர்மதேவன்
(ஆசிரியர், யா/தேவரையாளி இந்துக்கல்லூரி)


நன்றியுரை
திரு வீ.ரங்கநாதன்
(ஆசிரியர், யா/செங்குந்தா இந்துக்கல்லூரி)

நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர் -

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
29.10.1957



இறைவன் அடியில்
29.09.2023

### கணபதிப்பிள்ளை சர்வேஸ்வர செவ்வேள்

**(முன்னாள் முகாமையாளர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)**

கொக்குவில் மேற்கு கொக்குவிலை பிறப்பிடமாகவும் மாவடி வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சர்வேஸ்வர செவ்வேள் அவர்கள் கடந்த (29.09.2023) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை மகேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் (முன்னாள் சிந்மய பாரதி ஆசிரியை) அன்புக் கணவரும், வஜனியின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சர்வேஸ்வரரூபி மற்றும் சர்வேஸ்வர ஜோய், சர்வேஸ்வர லலிதா, சர்வேஸ்வர விமோசனம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யோகேஸ்வரி, முருகமூர்த்தி, கந்தசாமி, பாலசுப்பிரமணியம், விக்னேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், சோதிலிங்கம், இராஜலஷ்மி, சிவகௌரி ஆகியோரின் சகலனும், காலஞ்சென்ற சர்வானந்தம், கமலானந்தன், கமலநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் மற்றும் சர்மிளா (லண்டன்), சர்மிலன் (லண்டன்), சர்வன் (லண்டன்), ஸ்ரீவத்சலனி (கனடா), சுலக்சனா, ஜனேசன், உமாஜினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லிங்கேஸ்வரன் (லண்டன்), வாசுகி (லண்டன்), வேணிக்கா (லண்டன்), சத்தியேஸ்வரன், செந்தூரன், கயல்விழி, பிரசாந் ஆகியோரின் சித்தப்பாவும், ஷாலினி, கார்த்திகன், கபிலன், கிஷோர், கிஷானி, கிசாந், சரின், அபினா, காருண்யா, யதுகிருஸ்ணா, மதுவர்ணா, பவந்திகா, விகான், ஏகனேகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாவடி வீதி, சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு:-
074 217 4151, 075 040 3159

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்புத் தாமதமே

# சட்டவரைவை முழுமையாக வழங்காமைக்குக் காரணம்

## விளக்கமளிக்கிறார் தவராசா

யாழ்ப்பாணம், ஒக். 1

கடற்றொழில் நீரியல்வள திருத்தச் சட்டவரைவின் சில பாகங்கள் மொழிபெயர்ப்புத் தாமதம் காரணமாக வழங்கப்படவில்லை. அவ்வாறு வழங்கப்படாத பாகங்களில் தண்டம் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது - இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், கடற்றொழில் அமைச்சரின் ஆலோசகருமான சி. தவராசா தெரிவித்தார்.

கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த 21ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மீனவ அமைப்புகளுக்கான கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கடற்றொழில் நீரியல்வள புதிய திருத்தச் சட்டவரைவு தொடர்பில் ஆராயப்பட்டது. சட்டவரைவின் தமிழ்ப் பிரதியில் சில பாகங்கள் வழங்கப்படவில்லை. இது திட்டமிட்ட சதி நடவடிக்கை என்ற அடிப்படையில் யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் முன்னாள் உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் கருத்து வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் விளக்கமளித்துள்ள தவராசா, குறித்த கூட்டத்தில் மொழிபெயர்ப்பை நானும் வழங்கியிருந்தேன். சட்டவரைவின் சில பாகங்கள் தமிழில் மொழி பெயர்த்து எமக்குக் கிடைக்கவில்லை. அதனால் கிடைக்கப்பெற்ற வரைவுகளை வழங்கினோம். அவர்களுக்கு வழங்கப்படாத பாகங்களில் தண்டங்கள் பற்றி மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தக் கலந்துரையாடல்களை அனைத்து மீன்பிடி மாவட்டங்களிலும் நடத்தி வருகின்றோம். திருத்தச் சட்டவரைவு தொடர்பில் மீனவர்களின் அபிப்பிராயங்களை நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே பெற்று வருகின்றோம் - என்றார். (அ-ஒ-5)

### 2030 ஆம்...

'தற்போது இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் இராணுவத்தின் எண்ணிக்கையைப் பாதியாகக் குறைப்பதே அரசாங்கத்தின் இலக்காக இருந்து வருகிறது. எதிர்வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் இராணுவத்தின் எண்ணிக்கையை ஒரு இலட்சமாகக் குறைக்க அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளது. அதற்கு இணையாக கடற்படை மற்றும் விமானப்படையினரின் எண்ணிக்கையையும் குறைக்க அரசாங்கம் எண்ணியுள்ளது' என்று அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

### கோத்தாபயவுக்கு...

சீன மக்கள் குடியரசின் 74ஆவது தேசிய தினம் கடந்த வியாழக்கிழமை மாலை கொழும்பில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதிகளான கோத்தாபய ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ச, சந்திரிகா குமாரதுங்க, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உட்பட பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதிகள் நால்வருக்கும் ஒரே மேசையுடன் கூடிய ஆசனங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. எனினும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தாம் கோத்தாபய ராஜபக்ச உள்ளிட்டவர்கள் அமர்ந்திருக்கும் மேசையில் அமர முடியாது என்று கூறி மற்றொரு மேசையில் சம்பிக்க ரணவக்க உள்ளிட்டவர்களுடன் சென்று அமர்ந்து கொண்டார். (அ-ஒ-இ)

### பூநகரியில்...

செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளநிலையில், அடுத்தவருடம் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அவுஸ்ரேலியன் சோலர் சிறிலங்கன் பிரைவேட் லிமிட்டெட் என்ற நிறுவனத்தால் செயற்படுத்தப்படவுள்ள குறித்த திட்டத்துக்கான வரைபடமும் இறுதி செய்யப்பட்டநிலையில், இதற்கான அமைச்சரவை அனுமதி கடந்த மாதம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை மின்சாரசபையின் 6.5 வீத மின்சாரத்தை சேமிக்கும் நோக்கில் குறித்த செயற்றிட்டம் அமையப்பெறுவதுடன் வளிமண்டலத்தில் கார்பன் அளவைக் குறைக்கவும் இது உதவுமென்று கூறப்படுகின்றது.

குறித்த செயற்றிட்டத்துக்கான பூர்வாங்கப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன. அடுத்தவருடம் ஆரம்பமாகவுள்ள குறித்த திட்டத்தினை அடுத்த இரு வருடங்களுக்குள் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பகுதியில் நிலத்தடி நீரை பாதுகாக்கும் திட்டம், 13.5மில்லியன் ரூபா செலவில் குடிதண்ணீர்த் தொட்டி அமைத்தல் என்பனவும் மேற்கொள்ளப்படவுள்ளன. (அ-20)

### மக்கள்...

இலங்கை அரசாங்கம் இணையவழிப் பாதுகாப்புச் சட்டவரைவு குறித்து ஆராய்ந்து வரும் நிலையில் தொழில்நுட்பத் துறையினர், சிவில் சமூகத்தினர் மற்றும் பலதரப்பட்ட நிபுணர்களின் கருத்தை உள்வாங்குவது அவசியம் என அமெரிக்கத் தூதுவர் தமது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை - பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை சர்வதேச தரம் மற்றும் ஏனைய ஜனநாயக நாடுகளின் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப, திருத்தியமைக்க, இலங்கை அரசாங்கம் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றுமாறும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார். (அ-ஒ-இ)

### நீதிபதியை...

யிருந்தால் அதனைப் பொலிஸார் கண்டறியவேண்டும் - இவ்வாறு சிறிலங்கா பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார்.

நீதிவான் ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவியைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேறியுள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் அவரை இரண்டு தடவைகள் பெயரைக் குறிப்பிட்டு கடுமையாகச்சாடி உரையாற்றியவர் சரத் வீரசேகர. இந்த நிலையில் நீதிபதியின் பதவி துறப்பு மற்றும் வெளியேற்றம் தொடர்பில் சரத் வீரசேகரவை தொடர்பு கொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் நீதிபதியை அச்சுறுத்தியதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. நான் அவருடன் ஒருபோதும் கதைத்ததில்லை. குருந்தூர்மலையில் வைத்து அவருடன் கதைக்க முற்பட்டபோது அதற்கு அவர் இடமளிக்கவில்லை.

அவருக்கு உண்மையில் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தால் அவர் ஒரு நீதிபதி என்ற அடிப்படையில் அச்சுறுத்தல் விடுத்தவர்களுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்திருக்கமுடியும். அல்லது பொலிஸாருக்கு விசாரணைக்குப் பணித்திருக்கலாம். நீதிபதி தன்னுடைய மனைவிக்கும் சொல்லாமலேயே வெளிநாட்டுக்குச் சென்றதாகக் கூறப்படுகின்றது. நீதிபதி தன்னைக் கொடுமைப்படுத்தியதாக அவரது மனைவி நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கும் முறையிட்டிருக்கின்றார்.

அச்சுறுத்தலாலேயே வெளியேறியதாக அவர் சொல்வது அபகீர்த்தியானது. ஏனெனில் அந்தப் பகுதியில் சிங்கள மக்கள் இல்லை. தமிழ் மக்கள்தான் இருக்கின்றார்கள். சட்டமா அதிபர் தீர்ப்பை மாற்றுமாறு கூறியதாக அவர் சொன்னது உண்மையா என்பதை அரசாங்கம் அவருடன் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளவேண்டும். நீதிபதி முன்வைத்த குற்றச்சாட்டை நிரூபிக்கவேண்டும். யாரும் வெளிநாட்டுக்குச் சென்று அரசியல் தஞ்சம் கோரலாம். அரசியல் தஞ்சம் வழங்கும் நாடுகளும் அவர் குறிப்பிடும் சம்பவம் உண்மையா என்பதை விசாரிக்கவேண்டும். இல்லாவிடின் அந்த நாடுகளும் நகைப்புக்குள்ளாகும் - என்றார். (அ-ஒ-5)

### அமெரிக்கக்...

தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

'ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் சார்பில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. மழை பெய்தால், குளம் நிரம்பும் போன்ற நிலைமையே தற்போது காணப்படுகிறது.

ஆயினும் கட்சி என்ற வகையில் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படவேண்டும் என்ற பலமான யோசனை முன்வைக்கப்பட்டு வருகிறது. ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படப்போகும் வேட்பாளர் யார் என்பதை இதுவரை தீர்மானிக்கவில்லை' என்றும் தெரிவித்துள்ளார் பஸில். (அ-ஒ-இ)

### விசாரணைக்கு...

மாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது செயலர் சமன் ஏக்கநாயக்கவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக பொலிஸாருக்கு அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு நீதிவான் ஒருபோதும் அறிவிக்காத காரணத்தால் ஜனாதிபதி இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார். இந்தச் சம்பவத்துக்கான மூலகாரணத்தை உடனடியாக ஆராயுமாறு ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதையடுத்து ஜனாதிபதியின் செயலர் சமன் ஏக்கநாயக்க, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருடன் சம்பவம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். இதற்கு முன்னர் உயிர் அச்சுறுத்தல்கள் தொடர்பில் நீதிவான் முறைப்பாடு செய்யவில்லை என இந்தக் கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது.

கடந்த 24ஆம் திகதி வெளிநாடு சென்ற நீதிவான், தனது பதவி விலகல் கடிதத்தை செப்ரெம்பர் 23ஆம் திகதி நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளார் என ஜனாதிபதி செயலக தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-44)

### தொட்டிக்குள்...

பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. குழந்தையின் தாயார் சமையலறையில், சமையல் வேலைகளில் ஈடுபட்டிருந்தார். அயல்வீட்டுச் சிறுவர்களுடன் குழந்தை விளையாடிக்கொண்டிருந்துள்ளது. அப்போது குழந்தை திடீரென தண்ணீர்த் தொட்டிக்கு அருகிலுள்ள கல்லில் ஏறி தொட்டியைப் பார்த்துள்ளது. இதன்போது தொட்டிக்குள் குழந்தை தவறி விழுந்துள்ளது. குழந்தையைக் காணவில்லை எனத் தாயார் தேடியபோது தொட்டித் தண்ணீரில் மூழ்கிய நிலையில் குழந்தை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மருத்துவமனைக்கு குழந்தையைக் கொண்டுசென்றபோதும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-113)

### நாடாளுமன்றில்...

வுள்ளார். தேசிய மக்கள் சக்தி, சுயாதீன அணிகளும் 'நீதிபதி' விவகாரத்தை சபைக்குக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளன.

அதேவேளை, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளும், இவ்விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தின் கவனத்தை ஈர்க்கவுள்ளன. (அ-ஒ-44)

### தகவல்...

வித்துள்ளது. சர்வதேச சட்டவல்லுநர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் பகிரப்படும் வெறுப்பூட்டும் பேச்சு மற்றும் தவறான பதிவுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றபோதிலும், இலங்கையில் முன்மொழியப்பட்டுள்ள சட்டவரைவில் ஆழமான குறைபாடுகள் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கருத்துச்சுதந்திரத்தை நிலைநாட்டுவதில் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாகத் தவறிவரும் சூழலில், இவ்வாறானதொரு சட்டவரைவு தவறான முறையில் பயன்படுத்தப்படக்கூடிய வாய்ப்புகளைக் கொண்டிருப்பதாகவும் அந்தச் சங்கம் கூறியுள்ளது.

அரசாங்கத்தின் நடத்தை மற்றும் கொள்கைகள் தொடர்பான மக்களின் விவாதத்தை நசுக்குவதற்கு இந்த சட்டவரைவு பயன்படுத்தப்படும் அபாயம் இருப்பதாகவும் சர்வதேச சட்டவல்லுநர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதி சரவணராஜாவுக்கு தூதரகங்களுடன் தொடர்பாம்

## உண்மையை ஆராயுங்கள் என குணதாஸ அமரசேகர வலியுறுத்து

கொழும்பு, ஒக். 1

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு, வெளிநாட்டுத் தூதரகங்களுடன் தொடர்பு இருந்துள்ளது எனக் கூறப்படுகின்றது. எனவே, அவர் கூறும் காரணங்களை மட்டும் நம்பாமல், இதன்பின்புலத்தைஅரசுகண்டுபிடிக்க வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'முல்லைத்தீவு நீதிபதி ஏன் பதவி விலகினார்? என்பது பற்றிச் சரியான காரணங்கள் இன்னும் வெளிவரவில்லை. அவர் கூறும் காரணங்களை மட்டும் ஆராயாமல், இது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, உண்மை கண்டறியப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

நீதிபதியை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பின் அதனை நாம் கண்டிக்கின்றோம் - என்றார். (ம-44)

## தென்மராட்சியில் நெல் விதைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

தென்மராட்சி பிரதேச வயல்களில் காலபோக நெற்செய்கைக்கான விதைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கால்நடை வளர்ப்பாளர்கள் கால்நடைகளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை கட்டிவளர்க்குமாறு பிரதேச கமக்கார அமைப்புகள் அறிவித்துள்ளன. (ச-9)

### வீடு வாடகைக்கு

திருநெல்வேலி கலாசாலை வீதியில் 3 அறைகள் (இரண்டு அறைகள் A/C) சமையலறை நவீன குளியலறையுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

077 983 6719, 077 517 7183

### வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு கீழ் வரும் பணியாளர்கள் உடன் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

- சமையலாளர் - யாழ்ப்பாணத்து பாரம்பரிய சைவ உணவு வகைகள் செய்யத் தெரிந்திருத்தல் வேண்டும். (சம்பளம் 75,000 தொடக்கம் 100,000 வரை வழங்கப்படும்)
- சமையல் உதவியாளர் - (முன் அனுபவம் தேவை)

தொடர்பு: 077 251 4981, 077 872 9806

நேரில் சமூகம் தரவேண்டிய முகவரி:
195, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(195, Temple Road. Nallur, Jaffna)

(cr.40685) (N.1)

### பணிநிலை வெற்றிடம்

1. கணக்காளர் - Accountant
2. உதவிக்கணக்காளர் - Assistant Accountant
3. காசாளர் - Cashier (Day / Night)
4. துப்புரவுப்பணியாளர் - (Housc Keeping (Day / Night)

- கவர்ச்சி கரமான சம்பளத்துடன் மேலதிகக் கொடுப்பனவும் வழங்கப்படும்
- நேர் முகத்தேர்வு : 02.10.2023 திங்கட்கிழமை காலை : 8.30 மணி

இடம் : வீனஸ் விசேட வைத்தியசாலை
136, பலாலி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

076 976 7447, 076 255 5529, 070 613 6136

### நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் புதிய பழைய கட்டடங்கள். கோவில். வில்லு மண்டபங்கள். கொங்கிறீட் சிலப்புகள் அனைத்திற்குமான நீர் கசிவை தடுப்பதற்கும் மற்றும் வீடுகளில் ஏற்படும் வெடிப்புகளை உத்தரவாதத்துடன் சீர்செய்தும் தருவோம். நீங்களும் இரசாயன பொருட்களை பெற்றும் சீர்செய்யலாம்.

10 வருட உத்தரவாதத்துடன், பொருள்களுக்கு விலைக்கழிவும் உண்டு Finexஸ்தாபனத்தாரின் வட மாகாண ஏக விநியோகத்தர்களிடம் இருந்து உலகத்தரமிக்க இரசாயன பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முதன் முதலில் வடமாகாணத்தில் அறிமுகம் செய்தவர்கள் போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

North and East Engineering FINEX
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

### காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(CS24384)(J-1) 070 701 3060

### கட்டட வேலைகள்

பழைய வீட்டினை திருத்தியும் புதிய வீட்டினை நிர்மாணித்தும் தரப்படும்.

074 077 1490 (cs.52292 (N.1)

### வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் உள்ள பலசரக்கு வியாபார நிலையத்துக்கு முன் அனுபவமுள்ள

- கணினி மூலம் சிட்டை எழுதுனர் - பெண்
- விற்பனையாளர் - ஆண்

உடன் தேவை (cs 52330) (N-1)

077 392 1662

### தமிழ்ப் பாட வகுப்புகள்

க.பொ.த. உயர்தரம், சாதாரண தரம்
தரம்: 10, 9, 8, 7, 6 தனி / குழு
இலக்கிய நயம் Tamil Literature -10, 11 அடிப்படையிலிருந்து
மீட்டல் வகுப்புகள் - O/L
ஆரம்பம்: 01.10.2023 ஞாயிறுதினம்
யாழ்நகரில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்

தொடர்பு: 077 532 7636

### வேலையாள்கள் தேவை

A9 வீதியில் கைதடி நுணாவிலில் இயங்கும் மரத்தளபாட நிலையத்திற்கு தச்சுத்தொழிலாளர்களும், தச்சுவேலை பழகுபவர்களும் தேவை.

077 339 6323

### A/L Online Classes

TM / EM Biology /Chemistry 2025 (Group) Repeat,2023, 2024 Individual Classes
by Jaffna Lecturer 077 807 5566

### பெண் ரெயிலர் தேவை

பெண்களின் ஆடைகள் தைக்கத் தெரிந்த பெண்கள் தேவை. (திருநெல்வேலி)

077 761 8721, 077 244 8600

### காஸ் அவண் விற்பனைக்கு

36 இறாத்தல் பாண் வேக வைக்கத்தக்க காஸ் அவண் (Gas Oven) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 5150 619

### வீடு வாடகைக்கு

நல்லூருக்கு அருகாமையில் முருகேசு வீதியில் மாதாந்த வாடகை அடிப்படையில் வீடு வாடகைக்குண்டு. (Open Kitchen, Room With Attached Bathroom and Room)

076 352 8517, 077 837 4756

### வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கும் Courier நிறுவனத்திற்கு Branch Executive தேவை.
வயது - 18 -35 வரை

076 690 8967, 076 690 8978

### காணி விற்பனைக்கு

பொற்பதி வீதியில் பொற்பதி Avenue ஒழுங்கைக்கு எதிராக உள்ள ஒழுங்கையில் 50 மீற்றறில் 2 பரப்பிற்கு 2 குளி குறைவான காணி விற்பனைக்குண்டு. (ac 26454) (N.1)

076 895 2075

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* தரகர் தேவையில்லை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 076 0389

(CS 26393) A-1

## வேலைவாய்ப்பு



யாழ் நகரில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை.

1) வரவேற்பாளர்கள் (Receptionist) (ஆண் / பெண் இருபாலாரும்)
2) எழுதுவினைஞர் (Clerk)
3) சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (Marketing Officer)
4) பணம் வசூலிப்பவர் (Cash Collector)
5) விளம்பர வடிவமைப்பாளர் (Graphic Designer) (பகல் / இரவு)

ஆர்வமுள்ளவர்கள் 02.10.2023 திங்கட்கிழமை காலை 09.00 மணிமுதல் பிற்பகல் 12.00 மணிவரை உங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமூகம் தரவும்.

**உதயன் பணிமனை**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்:08
Registered as a Newspaper

தண்ணீர் தணல் போல் எரியும்
செந்தணலும் நீர் போல் குளிரும்
நண்பனும் பகைபோல் தெரியும்
அது நாட்பட நாட்பட புரியும்

– கண்ணதாசன்

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 புரட்டாதி 14 ஞாயிற்று[...]மை சிகரம் : 167



# சிசுவையும், கருப்பையையும் பறிகொடுத்த குடும்பம்!

○ மு.தமிழ்ச்செல்வன்

கடந்த சில மாதங்களாக இலங்கைத் தீவு முழுவதும் மருத்துவமனைகளில் நடைபெற்ற திடீர் மரணங்களால் அதனை ஒட்டி பலத்த விவாதங்கள் எழுந்திருந்தன. இலவச மருத்துவத்துறையின் பெருமைகளையும் அடைவுகளையும் கேள்விக்குள்ளாக்கும் வகையில் இந்த விவாதங்கள் அமைந்திருந்தன. இது தொடர்பில் பொதுமக்களுக்கு விளக்கமளித்து அவர்களது நம்பிக்கையை தக்க வைப்பதில் எவருக்கும் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக 'உள்வீட்டுச் சண்டைகள்' வெளியகமாக இடம்பெறுவதால் மக்கள் இன்னமும் குழம்பிப் போயுள்ளனர்.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டப் பொதுமருத்துவமனையில் நிகழ்ந்த மருத்துவத் தவறுகளால் பாதிக்கப்பட்டதாகத் தெரிவித்து ஒரு இளம் தாயாரும் அவரது கணவரும் நீதிக்கான போராட்டம் ஒன்றில் கடந்த மூன்று மாதங்களாக ஈடுபட்டுள்ளனர். 'அம்பலம் ஏறாத ஏழையின் சொல்லாக' அவர்களது குரல் சரியான வகையில்

## மருத்துவத் தவறுகளும் மறைக்கப்படும் உண்மைகளும்

எந்தத்தரப்பினராலும் வெளியே கொண்டுவரப்பட்டதாகத் தெரியவில்லை. அந்த இளம் தம்பதியரின் வசமுள்ள ஆவணங்களை வைத்துப் பார்க்கும்போது. அவர்களின் குற்றச்சாட்டுகளில் உண்மை இருப்பது போலவே தெரிய வருகிறது. இதற்கான உறுதியான ஆதாரமாக கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையின் பணிப்பாளர் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்துக்கு கடந்த மாதம் NP/04/45/DGH/KOC/Report என்ற இலக்கமிட்டுச் சமர்ப்பித்த அறிக்கையே காணப்படுகிறது.

## கிளிநொச்சியில் நடந்த அநீதி 'ஒரு நேரடி 'ரிப்போர்ட்'

### பணிப்பாளரது அறிக்கை கூறுவது என்ன?

குறித்த அறிக்கையின்படி, 26.06.2023 அன்று கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையின் ஆறாம் இலக்க பிரசவ விடுதியில் காலை 09.23 க்கு குறித்த தாயார் தனது பிரசவத்துக்காக மருத்துவர்களால் முன்கூட்டியே அறிவுறுத்தப்பட்டமைக்கு அமைவாக சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு மறுநாள் பிரசவத்தினைச் செயற்கையாகத் தூண்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி 27.06.2023 அன்று ஆறு மணி நேர இடைவெளியில் தாயாருக்கு 1 மில்லிகிராம் களிம்பு (Prostaglandin gell)) பிறப்புவாசலினால் உட்செலுத்தப்பட்டது.

அதேதினம் மாலை 1.20 மணியளவில் பன்னீர்குடம் உடைந்து நீர் வெளியேறியது. அப்போது கர்ப்பப்பையின் கழுத்து 5 சென்ரிமீற்றராக விரிவடைந்திருந்தது. அதனையடுத்துத் தாயார் பிரசவ அறைக்கு (Labour room) கொண்டு செல்லப்பட்டார்.

அன்று மாலை 5.30 மணிக்கு கர்ப்பப்பையின் கழுத்து முழுமையாக (10 செ.மீ.) விரிவடைந்திருந்தது. மாலை 6.30 மணிக்கு தாயாரைப் பார்வையிட்ட உள்ளகப் பயிற்சி மருத்துவர், அப்போது கடமையில் இருந்த மூத்த மருத்துவ உத்தியோகத்தருடன் (SHO) தொடர்பு கொண்டுள்ளார். அதனையடுத்து 7.10 மணிக்கு வருகைதந்த மூத்த மருத்துவ உத்தியோகத்தர் தாயாரைப் பார்வையிட்டபின் மகப்பேற்றியல் நிபுணருடன் (VOG) தொடர்பு கொண்டு அறிவித்துள்ளார். அதன்பின்னர் வருகைதந்து பார்வையிட்ட மகப்பேற்றியல் நிபுணர் பிரசவத்தின் இரண்டாம் கட்டமானது நீண்டு செல்வதால் (Prolong second stage) குழந்தையை ஆயுதம் பயன்படுத்துவதன் மூலம் (Instrumental delivery) பிரசவிப்பதென முடிவு செய்தார். பிரசவ அறையில் ஆயுதம் மூலம் குழந்தையினைப் பிரசவிக்க எடுத்த முயற்சியானது தோல்வியில் முடிந்ததை அடுத்து, அவசரமாகச் சிசேரியன் சத்திரசிகிச்சை (EM/LSCS) செய்யப்பட்டது. இந்தப் பிரசவம் தொடங்கியதில் இருந்து நிறைவடையும் வரை குழந்தையினது இதயத்துடிப்பு (CTG) மற்றும் தாயாரின் இதயத்துடிப்பு, சுவாச வீதம் முதலிய கணியங்கள் சாதாரணமாகவே இருந்தன.

முன்நாண் உணர்விழப்பு (Spinal Anaesthesia) முறையின் உதவியுடன் அவசர சிசேரியன் சத்திரசிகிச்சையானது மூத்த மருத்துவரினால் (SHO) மேற்கொள்ளப்பட்டது. வயிற்றறையினைச் சத்திரசிகிச்சையின்போது திறந்த அந்த மூத்த மருத்துவர் , வயிற்றறைக்குழியினுள் (abdominal cavity) நிரம்பியிருந்த இரத்தத்தினைக் கண்டதும் கர்ப்பப்பை வெடித்திருக்கக்கூடும் எனச் சந்தேகித்தார். அதனை அவர் மகப்பேற்றியல் நிபுணருக்கு அறிவித்தார். அடுத்து அங்கு வந்த மகப்பேற்றியல் நிபுணர் சிசேரியன் சத்திரசிகிச்சையினைத் தொடர்ந்து மேற்கொண்டு, ஏற்கெனவே வயிற்றறைக் குழியினுள் பாதியளவு வந்து கிடந்த குழந்தையினை வெளியே எடுத்துக் குழந்தை மருத்துவக்குழாத்திடம் கையளித்தார். அவர்கள் குழந்தையினை மீள உயிர்ப்பிக்க முயற்சித்தனர். இறுதியாக குழந்தை இறந்து பிறந்ததாக அறிவிக்கப்பட்டது. குழந்தையின் எடை 2.630 கிலோ கிராம்.

கர்ப்பப்பையின் பின்பக்கச் சுவரானது வெடித்திருந்தது (posterior uterine wall rupture) அவதானிக்கப்பட்டது. அது பிறப்புறுப்பின் பின்பக்கச் சுவர்வரை நீண்ட வெடிப்பாகக் (extended up to the posterior vaginal wall) காணப்பட்டது. இந்த வெடிப்பினைச் சரிசெய்வதற்கு மகப்பேற்றியல் நிபுணர் முயன்றாலும், அதனை அணுகுவதில் ஏற்பட்ட சிரமம் (difficult access) மற்றும் தொடர்ந்து கொண்டிருந்த குருதிப் பெருக்கு ஆகியன காரணமாக தாயாரின் உயிரைக் காக்கும் பொருட்டு அவசரமாக கர்ப்பப்பையினை அகற்றும் முடிவினை எடுத்தார். தாயார் இடுப்பின் கீழாக மட்டும் உணர்விழக்கச் செய்யப்பட்டிருந்ததால், கர்ப்பப்பையினை அகற்றும் தீர்மானத்தினை மேற்கொண்டமை குறித்து சத்திரசிகிச்சையின்போதே அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சத்திரசிகிச்சை நடவடிக்கையின்போது மொத்தம் 3 லீற்றர் இரத்தம் வெளியேறியிருந்ததாக கணிப்பீடு செய்யப்பட்டது. தாயாருக்கு 5 பைந்த் (2.8 லீற்றர்) இரத்தம் ஏற்றப்பட்டதுடன் ஒருநாள் அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்துத் தீவிர கண்காணிப்புக்கும் உட்படுத்தப்பட்டிருந்தார்.

அதன்பின்னர் சாதாரண விடுதிக்கு மாற்றப்பட்ட தாயார் 30.06.2023 அன்று வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்.



07



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இணையப் பாதுகாப்பு விதிகளும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும்

அ.நிக்ஸன்

## தம்மீதான கடும் விமர்சனங்களைத் தடுக்கும் நோக்கில் அமைதிகாக்கும் தமிழ்த்தேசியக் கட்சிகள்

இணையங்கள் ஊடாக ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்ப்பதாகக் காரணம் கூறிக் கொண்டு அரசாங்கம், வர்த்தமானியில் வெளியிட்டுள்ள இணையவழிப் பாதுகாப்பு எனப்படும் "நிகழ் நிலைக்காப்புச் சட்ட வரைவு" (Online Safety Bill) சமகால அரசியல் பொருளாதார நோக்கில் மேலும் பாதிப்புகளை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

இந்த வரைவு நடைமுறைக்கு வந்தால் விசேடமாக ஊடகத்துறை உள்ளிட்ட பேச்சுச் சுதந்திரம் மற்றும் கருத்துடைய பலரையும் கடுமையாக ஒடுக்கும் என்றே பொருள்கொள்ளமுடியும். ஆனால் இணையவழிப் பாதுகாப்புக்கான உள்ளடக்கத்தை ஒழுங்குபடுத்துவதையும், இணையப் பயனாளிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டு இந்தச் சட்ட வரைவைத் தயாரித்துள்ளதாக இலங்கை ஒற்றையாட்சி அரசாங்கம் நியாயப்படுத்துகின்றது. இருந்தாலும் கருத்துச் சுதந்திரத்தின் மீதான அதன் சாத்தியமான தாக்கம், அரசாங்கம் மற்றும் அரசியல்வாதிகளின் ஊழல் மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள் பற்றிய விமர்சனங்களைத் தணிக்கை (Censorship) செய்யும் ஆபத்துகள் உண்டு.

ஏனெனில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு (Prevention of Terrorism Act PTA) மாற்றாக உருவாக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (AntiTerrorism Act ATA) பற்றிய நகல் வரைவும், நிகழ் நிலைக்காப்புச் சட்டம் பற்றிய வரைவும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளமைதான் இங்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மாதம் 15, 18 ஆம் திகதிகளில் குறித்த இரண்டு வரைவுகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள



தைக் கண்டித்துள்ள இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம், அரசாங்கம் உடனடியாக இதனை விலக்கிக்கொள்ளவேண்டும் என்றும் கடும் தொனியில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதேவேளை, தமிழ் , முஸ்லிம் மக்கள் எவ்வாறான பாதிப்புகளை எதிர்கொள்வர் என்றும், முப்பது வருடப் போரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் தமிழர்கள் எதிர்கொண்ட துயரங்களுக்கான "மூலங்கள்" பற்றியும் இந்த இரண்டு வரைவுகளையும் எதிர்ப்போர் பரிசீலிக்க வேண்டியது அவசியம். ஏனெனில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மேற்படி இரண்டு நகல் சட்ட வரைவுகளுக்கும் இடையே வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. 1981 இல் யாழ் .பொதுநூலகம், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் ஆகியவை எரிக்கப்பட்ட நாளில் இருந்து கருத்துச் சுதந்திரம் இலங்கைத்தீவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியே வருகின்றது.

இந்தப் பின்னணியிலேயே 2023 செப்ரெம்பர் மாதம் முன்மொழியப்பட்டுள்ள மேற்படி இரு வரைவுகளும், கருத்துச் சுதந்திரத்தையும், மாற்றுக் கருத்துகளை முன்வைக்கும் நபர்களையும் சமகால அரசியல் பொருளாதார நோக்கில் நேரடியாகக் குறிவைத்துள்ளது என்பது உண்மையாகிறது.

**இதன் விதிகள் பின்வருமாறு**

1. இணையப் பாதுகாப்புக்கான நிகழ் நிலைக்காப்புச் சட்டத்தின் செயலாக்கத்தை மேற்பார்வையிடவும் அதன் தீங்குகள் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்யவும் ஐந்துபேரைக் கொண்ட இணையப் பாதுகாப்பு ஆணைக்குழு (Online Safety Commission) ஒன்றை நியமித்தல்.
2. முறைப்பாடுகளின் அடிப்படையில் இணைய சேவை வழங்குநர்கள் (Internet Service Providers ISPs) தங்கள் தளங்களில் இருந்து தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தை அகற்றுதல்.
3. இணையத்தளச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும், நிறுத்தவும் அதற்குரிய அறிவுறுத்தல்களை இணையச் சேவை வழங்குநர்களுக்கு (ISPs) உத்தரவிடவும் இணையப் பாதுகாப்பு ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.
4. குறித்த விதிகளுக்குக் கட்டுப்படாத இணைய சேவை வழங்குநர்கள் (ISPs) மற்றும் சமூக ஊடக நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கும் அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த நான்கு விதிகளும் கருத்துச் சுதந்திரத்துக்கு- குறிப்பாக ஊடகச் செயற்பாடுகளுக்கு - ஆபத்து என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆணைக்குழுவின் தீர்ப்புக்கு (Judgment) எதிராகவோ அல்லது அறிவுறுத்தல்களுக்கு (Instructions) எதிராகவோ இணையசேவை வழங்குநர்கள் மற்றும் பயனாளிகள் எவருமே நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியாது.

தீங்கிழைக்கப்பட்டுள்ளதாகக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை ஆராயும் சரியான வழிமுறைகள் பற்றிய விடயங்கள் நகல்வரைவின் உள்ளடக்கத்தில் தெளிவாக விவரிக்கப்படவில்லை.

ஆகவே ஒழுக்கநெறிப்படி தீங்குவிளைவிக்காத ஊடகச் செயற்பாடுகளுக்கும், தீங்கு ஏற்படுத்தாத சமூகவலைத்தள கருத்துச் சுதந்திரத்தையும் இது தணிக்கை செய்யும் என்ற அச்சம் உண்டு. இணையப் பாதுகாப்பு ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள கூடுதலான அதிகாரம் இந்த நகல் வரைவில் தெளிவாகக் காணப்படுகின்றது. இது சாத்தியமான, தவறான பயன்பாடு மற்றும் எதிர்ப்பை அடக்குதல் பற்றிய கவலைகளை ஊடக மற்றும் சமூகவலைத்தளச் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படவுள்ள ஐந்து உறுப்பினர்களும் நேரடியாக ஜனாதிபதியின் தெரிவாக இருப்பதால், நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களை இந்த வரைவு மேலும் விரிவுபடுத்துவதை ஆதரிக்கிறது என்றும் பொருள் கொள்ள முடியும். ஆகவே இணையச் செயற்பாடுகள் பற்றிய ஆணைக்குழுவின் இறுதி முடிவு ஜனாதிபதிக்கும் அவருடைய அரசாங்கத்துக்கும் அரசியல்வாதிகளுக்கும் பாதுகாப்பாக இருக்கும் என்பதில் ஐயமேயில்லை.

வரைவின் சில உட்பிரிவில் இன-மத வெறுப்புப் பேச்சைத் தவிர்த்தல் என்ற போர்வையில் பௌத்த குருமாரின் அத்துமீறல் செயற்பாடுகளுக்கு மறைமுகமாக இடமளிக்கப்பட்டுள்ளது. வடக்கு- கிழக்கு உள்ளிட்ட இருபத்து இரண்டு மில்லியன் இலங்கைத்தீவு மக்களுக்கு எது உண்மை, எது பொய் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரங்களை ஆணைக்குழு தன்னிச்சையாகக் கொண்டிருக்கிறது. அத்துடன் இந்த ஆணைக்குழுவில் தமிழ்ப் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பார்களா, இல்லையா என்பதும் சந்தேகமே. அதேவேளை வரைவில் 14 குற்றங்களின் பட்டியலில் சிறுவர்கள், குழந்தைகள் மற்றும் பெண்களை இணையத்தின் மூலம் துஷ்பிரயோகம் செய்யும் தீங்கான செயற்பாடுகளில் இருந்து பாதுகாக்கும் ஏற்பாடுகளும் உண்டு. இணையவழி மூலம் ஏமாற்றுதல் மற்றும் பழிவாங்கும் ஆபாசப் படங்களையும் வீடியோக் காட்சிகளையும் வெளியிடமுடியாது.

ஆனால் சிறுவர்கள், பெண்கள் பற்றிய இணையப் பாதுகாப்பு விதிகள் ஏற்கனவே உள்ள சட்டங்களில் உண்டு. நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் மூலம் அவற்றை மீளவும் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை என்று இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆகவே சிறுவர்கள், பெண்களைப் பாதுகாப்பது என்ற சமூக உணர்வுகளை மக்களிடம் ஊட்டி அதன்மூலம் கருத்துச் சுதந்திரத்தையும் ஊடகச் செயற்பாடுகளையும் தமது விருப்பங்களுக்கு ஏற்ப மாற்றுவதே அரசாங்கத்தின் இலக்கு என்று தெரிகிறது.

மக்களைப் பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு பொய்களை எதிர்க்கும் பெயரில் 23 முறை "பொய்கள்" என்ற வார்த்தை நகல் வரைவில் காணப்படுகின்றன.

ஆனால் "பொய்கள்" அதனைத் தவிர்த்தல் என்ற பகுதி தெளிவில்லை. அதாவது அரசியல் விவகாரம் சார்ந்து ஒருவர் உண்மையை அல்லது நேர்மையாக விமர்சனம் செய்தால், முறைப்பாடுகளின் அடிப்படையில் அந்த விமர்சனத்தைப் 'பொய்' என்று வரைவிலக்கணம் கொடுத்து அதனை எழுதிய நபருக்கு ஆணைக்குழு தண்டனை வழங்கமுடியும். இது நியாயமான அரசியல் விமர்சனம் உள்ளிட்ட மாற்றுக் கருத்துகளைத் திட்டமிட்டு அடக்குவதற்கு, சட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயன்பாட்டின் அபாயத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்துகிறது.

இது சட்டமாக நிறைவேற்றப்பட்டால், கொடுக்கப்பட்ட தகவல் உண்மையா அல்லது பொய்யா என்பதைத் தீர்மானிப்பது ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஐந்து நபர்களைக் கொண்ட இணையப் பாதுகாப்பு ஆணைக்குழுவுக்குரிய அதிகாரமாகிறது.

சில சமயங்களில் நீதிவான் நீதிமன்றத்துக்கும் பாரப்படுத்தக்கூடிய ஏற்பாடுகளும் வரைவில் உண்டு. ஆகவே இது இலங்கை அரசியல் யாப்பில் அடிப்படை உரிமையாக உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தைக் கடுமையாகக் குறை மதிப்புக்கு உட்படுத்தும் என்பதில் சந்தேகமேயில்லை.

அதேவேளை இணையவழிப் பொருளாதார செயல்முறைகள் பாதிக்கப்படுமென 'த மோர்னிங்.எல்கே' (themorning.lk) என்ற ஆங்கிலச் செய்திச் சேவையிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டுகிறார்.

உண்மை எது, பொய் எது என்பதை இணையப் பாதுகாப்பு ஆணைக்குழு மாத்திரமே தீர்மானிக்கும் உரிமையைக் கொண்டுள்ளது என்றால், இலங்கையில் இயங்கும் கூகுள் வரைபட (Google Maps) நிறுவனச் செயற்பாட்டாளர்கள் வெளியேறும் ஆபத்துகள் நேரிடும் என்று அவர் எச்சரிக்கிறார்.

இலங்கைத்தீவு கூகுள் பயன்பாட்டு விடயத்தில் ஒரு சிறிய சந்தைதான். ஆனாலும் அனைத்துப் புதிய சேவைகளும் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டவை.

இதனால் கூகுள் செயற்பாட்டு வரைபடங்கள் இல்லாமல் பொருளாதாரம் எப்படி முன்னேறமுடியும் என்று கேள்வி எழுப்பிய ஹர்ஷ டி சில்வா, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஐந்து நபர்களைக் கொண்ட ஆணைக்குழுவினால் 'கூகுள்' ரீதியான பொருளாதார மைய இயங்கு தளங்களைக் கட்டுப்படுத்த முற்படுவது முட்டாள்தனம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். இருந்தாலும் ஊடகம், சமூகவலைத்தளம் போன்றவற்றை இணையவழிப் பாதுகாப்பு என்ற போர்வையில் இந்தச் சட்டம் எவ்வாறு கட்டுப்படுத்தும் என்பது தொடர்பாகப் பிரதான எதிர்க்கட்சிகள் மற்றும் ஜே.வி.பி. போன்ற சிறிய சிங்களக் கட்சிகள் உருப்படியாகக் கருத்தும் தெரிவிக்கவில்லை. பகிரங்க எதிர்ப்பும் வெளியிடவில்லை என்பதுதான் இங்கே கவலைக்குரியது.

இந்த நகல் வரைவுக்கு நாடாளுமன்றத்தில் எதிர்ப்புத் தெரிவிப்பது போன்று காண்பித்துவிட்டுப் பின்னர் வாக்கெடுப்பின்போது வெளியேறக்கூடிய நிலைப்பாடு பிரதான எதிர்க்கட்சிகளிடம் இருப்பதை அவதானிக்க முடிகிறது. ஏனெனில் நாளை ஆளும் கட்சியாக வந்தால் அல்லது ஆளும் கட்சிக்கு ஒத்துழைத்தால் இந்தச் சட்டமூலம் தங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்ற கருத்து அவர்களிடம் உண்டு. தம்மீது சமூகவலைத் தளங்களில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதால் ஜே.வி.பி. போன்ற சிறிய சிங்களக் கட்சிகள் மற்றும் தமிழ்த்தேசியக் கட்சிகளும், முஸ்லிம் கட்சிகளும் இந்த நகல் வரைவு தங்களுக்குப் பாதுகாப்பு என்று நம்பி அமைதியாக இருக்கின்றன போல் தெரிகின்றது. மலையகத் தமிழ்க் கட்சிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் சமூகவலைத்தளச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் இருந்தே இந்த வரைவுக்கான எதிர்ப்புகள் வெளிக்கிளம்பியுள்ளன. பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவோடு, நிகழ் நிலைக்காப்புச் சட்ட வரைவையும் இணைத்து சர்வவல்லமை பொருந்திய அதிகாரத் தலைவராக உருவெடுப்பதே ரணில் விக்கிரமசிங்கவின் திட்டம். அதற்காக அவர் என்ன விலையையும் கொடுக்கவும் கூடும். ஆனால் அதன் பின்னர் உண்மைகள், திட்டமிட்டு பொய் எனும் முலாம் பூசப்பட்டு, கருத்துச் சுதந்திரம் புதைகுழிக்குள் தள்ளப்பட்டுவிடும் என்பதே யதார்த்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதிக்கே கிடைக்காத நீதி?



நிலாந்தன்

கடந்த வாரம் திலீபன். இந்த வாரம் ஒரு நீதிபதி. முல்லைத்தீவு நீதிபதிக்கு எதிரான சரத் வீரசேகரவின் கருத்துகள் வெற்றிடத்தில் இருந்து வரவில்லை. அவை ஒரு தனி நாடாளுமன்ற உறுப்பினரின் கூற்றுகள் என்றும் எடுத்துக் கொள்ளத்தேவையில்லை. அவை ஒரு கூட்டு உளவியலின் வெளிப்பாடுகள். கடந்த பல தசாப்தங்களாக, சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாக ஸ்ரீலங்கா நாடாளுமன்றம் எனப்படுவது வெறுப்புப் பேச்சுகளைக் கக்கும் ஓரிடமாகத்தான் காணப்படுகிறது. இனப்படுகொலை தொடர்பான ஐ.நா.வின் நிபுணத்துவக் கூற்று ஒன்று உண்டு. "யூத இனப்படுகொலை எனப்படுவது காஸ் சேம்பர்களில் இருந்து நச்சுவாயுக் கொலைக்கூடங்களில் இருந்து தொடங்கவில்லை. வெறுப்புப் பேச்சுகளில் இருந்துதான் தொடங்கியது" என்று.

இலங்கை நாடாளுமன்றம் கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சுகளை அச்சமின்றிக் கூறும் ஓரிடமாகக் காணப்படுகின்றது. நாடாளுமன்றப் பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்ட மற்றும் நீக்கப்படாத வெறுப்புப் பேச்சுகளைத் தொகுத்தாலே போதும். இனப்பிரச்சினையின் ஊற்றுகளை-இனப்படுகொலையின் ஊற்றுகளைத் - தெளிவாகக் காணலாம். சரத் வீரசேகர ஒரு தனி நாடாளுமன்ற உறுப்பினராக முல்லைத்தீவு நீதிபதியை அவமதிக்கவில்லை. அவர் ஒரு சமூகத்தின் கூட்டு உளவியலைத்தான் பிரதிபலித்தார். ஒரு நாடாளுமன்றத்தின் அபகீர்த்திமிக்க ஒரு பாரம்பரியத்தின் ஆகப்பிந்திய வாரிசு அவர்.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன தனக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கிய பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனின் வீட்டைக் கற்களால் தாக்குமாறு தனது ஆதரவாளர்களை ஏவியதாக குற்றம் சாட்டப்படுகிறது. எந்தப் பிரதம நீதியரசரின் முன் அவர் பதவியேற்றாரோ, அதே பிரதம நீதியரசரின் வீட்டைத் தாக்குமாறு குண்டர்களை ஜே.ஆர். ஏவி விட்டார். ராஜபக்சக்கள் இலங்கைத் தீவின் முதற் பெண் பிரதம நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்காவை நாடாளுமன்றத்தின் மூலம் பதவி நீக்கினார்கள். தங்கள் சொந்த இனத்தைச் சேர்ந்த பிரதம நீதியரசர்களையே அவமதிக்கும் ஓர் அரசியல் பாரம்பரியத்தில், ஒரு மாவட்ட நீதிபதிக்கு இவ்வாறு நடந்தமை புதுமையானது அல்ல.

அதுமட்டுமல்ல இந்த விடயத்தில் தமிழ் மக்கள் மேலும் ஆழமாக விளங்கிக் கொள்ள வேண்டிய ஒரு விடயம் உண்டு. சட்டம், நீதி பரிபாலனக் கட்டமைப்பு போன்றவை சுயாதீனமானவை என்று கூறப்படுவது ஒரு தோற்றமாயைதான். ஜனநாயக இதயம் செழிப்பாக இருக்கும் ஒரு நாட்டில் நீதிபரிபாலனத் துறைக்கும் சட்டவாக்கத்துறைக்கும் இடையே வலுவேறாக்கம் இருக்கக்கூடும். ஆனால் ஜனநாயகத்துக்குப் பதிலாக இனநாயகம் பயிலப்படும் ஒரு நாட்டில், இனநாயகத்தின் பாதுகாப்பிடமாகக் காணப்படும் ஒரு நாடாளுமன்றம் இனரீதியாகப் பாரபட்சமுள்ள சட்டங்களைத்தான் நிறைவேற்றும். அதாவது ஓர் அரசுக் கட்டமைப்பின் அரசுக் கொள்கை எதுவோ அதைத்தான் அவர்கள் சட்டமாக நிறைவேற்றுவார்கள். அந்தச் சட்டத்தைத்தான் நீதிபரிபாலனக் கட்டமைப்பு அமுல்படுத்தும். அதாவது சட்டமும் நீதிபரிபாலனக் கட்டமைப்பும் அரசின் உபகரணங்கள்தான். இதில் சில தனிப்பட்ட நீதிபதிகள் அந்த 'சிஸ்டத்தின்' கைதிகளாக இருக்கமறுக்கும்பொழுது நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டிவரும்.

சட்டம் என்பது அதிகாரத்தின் சேவகன்தான். அதிகாரத்தில் இருப்பவர்கள் தமது ஆட்சிக் கொள்கையை அமுல்படுத்த சட்டங்களை இயற்றுவார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டம். இப்பொழுது விவாதிக்கப்படும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைவு, நிகழ்நிலை காப்புச் சட்டவரைவு போன்ற எல்லாமே ஒடுக்கும் அரசுக்கட்டமைப்பின் உபகரணங்களே. இவை மட்டுமல்ல பெருந்தொற்று நோய்க்காலத்தில் தனிமைப்படுத்தல் சட்டமானது தமிழ் மக்களின் நினைவு கூரும் உரிமைக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டதை இங்கு சுட்டிக்காட்டலாம்.

இதுதொடர்பில் அதிகம் பகிரப்படும் ஓர் ஆங்கிலக் கூற்று உண்டு. "தென்னாபிரிக்காவின் இனஒதுக்கல் சட்டபூர்வமாகத்தான் செய்யப்பட்டது. ஹிட்லர் யூதர்களை இனப்படுகொலை புரிந்தமை சட்டபூர்வமாகத்தான் செய்யப்பட்டது. அடிமை முறைமை சட்டபூர்வமானது. கொலோனியலிசம் அதாவது குடியேற்றவாதம் சட்டபூர்வமானது. எது சட்டபூர்வமானது என்பது நீதியின்பாற்பட்ட ஒரு விவகாரம் அல்ல. அது அதிகாரத்தின்பாற்பட்ட ஒரு விவகாரமே"

இலங்கைத்தீவில் நாடாளுமன்றம் இனரீதியிலான அதிகாரத்தைப் பிரதிபலிக்கும்போது இங்கு சட்டமும் அந்த அதிகாரத்தின் சேவகனாகவே காணப்படும். இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்துத்தான முல்லைத்தீவு நீதிபதியின் விவகாரத்தைப் பார்க்கவேண்டும்.

இலங்கைத்தீவின் உள்நாட்டு நீதியெனப்படுவது ஏற்கனவே கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு விட்டது. 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட ஐ.நா.வின் நிலைமாறுகால நீதிக்கான அல்லது பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம் எனப்படுவது உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை கேள்விக்கு உள்ளாக்குகின்றது. உள்நாட்டு நீதி போதுமாக இருந்தால் எதற்காக நிலைமாறு கால நீதி என்ற அனைத்துலக ஏற்பாட்டைக் குறித்துச் சிந்திக்கவேண்டி வந்தது? மேலும் அண்மையில் வெளியிடப்பட்ட 'சனல் 4' வீடியோவும் உள்நாட்டு நீதி தொடர்பாக ஏற்கனவே உள்ள சந்தேகங்களைப் பலப்படுத்துகின்றது.

கடந்த ஆண்டு ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்ட 56/1 தீர்மானத்தின் அடிப்படையில் சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரித்துத் தொகுப்பதற்கான ஒரு கட்டமைப்பு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையருடைய அலுவலகத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றது. இதில் சேகரிக்கப்படும் தகவல்கள் என்றைக்கோ ஒரு நாள் இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்தப்படத்தக்கவை. அவை நிச்சயமாக இலங்கைத்தீவின் உள்நாட்டு நீதிபரிபாலனக் கட்டமைப்பிடம் வழங்கப்படப் போகும் தகவல்கள் அல்ல. இலங்கைத் தீவின் உள்நாட்டுப் புலனாய்வுக் கட்டமைப்பு மற்றும் நீதிபரிபாலனக் கட்டமைப்பு என்பவற்றின் மீதான நம்பகத்தன்மையை அந்த அலுவலகம் கேள்விக்கு உள்ளாக்குகின்றது.

இவ்வாறான அனைத்துலகச் சூழலில்தான் முல்லைத்தீவு நீதிபதியின் பதவி விலகல் நடந்திருக்கிறது. இது பொறுப்புக் கூறல் தொடர்பில் இலங்கைத் தீவின் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை மேலும் பலப்படுத்தக்கூடியது. தமிழ் மக்கள் ஏன் அனைத்துலக விசாரணையைக் கேட்கின்றார்கள் என்பதனை நிரூபிப்பதற்கு ஆகப்பிந்திய சான்று இது.

தென்னிலங்கையில் உள்ள பேராயர் மல்கம் ரஞ்சித், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் அனைத்துலக விசாரணை குறித்த தமது கோரிக்கைகளிலிருந்து பின்வாங்கும் ஓர் அரசியல் சூழலில், இந்த விவகாரம் தமிழ் நோக்குநிலையில் பொருத்தமாகக் கையாளப்பட வேண்டிய ஒன்று. பேராயர் மல்கம் ரஞ்சித், மைத்திரிபால சிறிசேனா போன்றவர்கள் தொடக்கத்தில் அனைத்துலக [illegible] இப்பொழுது [illegible] விட்டது. சிங்கள- பௌத்த கூட்டு உளவியலைப் பாதுகாப்பதற்காக அவர்கள் தளம்பத் தொடங்கி விட்டார்கள். எந்த ஒரு கூட்டு உளவியலின் பிரதிநிதியாக சரத் வீரசேகர பேசுகிறாரோ, அதே கூட்டு உளவியலின் வெவ்வேறு முகங்கள்தான் பேராயரும் முன்னாள் ஜனாதிபதியும். எனவே அனைத்துலக விசாரணைக்கான கோரிக்கையை தமிழ் மக்கள் பெரும்பாலும் தனியாகத்தான் முன்னெடுக்கவேண்டியிருக்கும். ஆனால் அதைக்கூட ஒரு கட்சியாக முன்னெடுப்பதற்குப் பதிலாகப் பல கட்சிகளாக முன்னெடுப்பதே பலம்.

கடந்த கிழமை திலீபன், இந்தக் கிழமை ஒரு நீதிபதி....என்றவாறாக தமிழ் மக்களின் கவனமும் ஊடகங்களின் கவனமும் புதிய புதிய விடயங்களின் மீது குவிக்கப்படுகின்றன. ஆனால் அவை வெவ்வேறு விடயங்கள் அல்ல. ஒரே ஒடுக்கும் கட்டமைப்பின் வெவ்வேறு வெளிப்பாடுகளே அவை. அவற்றை அவற்றுக்கேயான ஒட்டுமொத்த வரைபடத்துக்குள் வைத்து தமிழ்மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டும். அதாவது ஒடுக்குமுறைக்கு ஒரு நீண்ட கால வழி வரைபடமும் மாறாத நிகழ்ச்சி நிரலும் ஒன்றிணைந்த செயற்பாடும் உண்டு.

எனவே அதற்கு எதிரான போராட்டங்களும் ஒன்றிணைக்கப்பட்டதாக இருக்கவேண்டும். தாயகம், புலம்பெயர் சமூகம், தமிழகம் ஆகிய மூன்று தரப்புகளும் ஒன்றிணைந்து அந்தக் கோரிக்கையை உக்கிரமாக முன்வைக்க வேண்டும். அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றங்களை நோக்கிச் செல்வதற்கான வழி வரைபடம் ஒன்று தமிழ்க்கட்சிகளிடமும் செயற்பாட்டாளர்களிடமும் இருக்கவேண்டும்.

அனைத்துலக விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை ஐ.நா.வுக்கு எழுதும் கடிதங்களில் மட்டும் இருந்தால் போதாது. அல்லது ஐ.நா.வின் பக்க நிகழ்வுகளில் அல்லது ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகளில் இருந்தால் மட்டும் போதாது. அல்லது ஊடகங்களுக்கு வழங்கப்படும் நேர்காணல்களில் இருந்தால் மட்டும் போதாது. அல்லது தேர்தல் கால விஞ்ஞாபனங்களில் இருந்தால் மட்டும் போதாது. அதற்குமப்பால், அதைவிட ஆழமான பொருளில், அதற்கு வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். அனைத்துலக விசாரணையைக் கோருவது அல்லது சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றங்களை நோக்கி விவகாரத்தை எடுத்துச் செல்வது போன்றன அறநெறியின் பாற்பட்ட அல்லது நீதிநெறியின் பாற்பட்ட கோரிக்கைகள் அல்ல. அவை முழுக்க முழுக்க வெளியுறவுச் செயற்பாடுகள். பலம் வாய்ந்த நாடுகள் அப்படி ஓர் அரசியல் தீர்மானத்தை எடுக்க வேண்டும். ஏனென்றால் இந்தப் பூமியிலே தூய நீதி என்று எதுவும் கிடையாது. அரசியல் நீதிதான் உண்டு. நிலைமாறுகால நீதியோ அல்லது பரிகார நீதியோ எதுவானாலும், அரசியல் நீதி என்பது நாடுகளுக்கு இடையிலான அரசியல், பொருளாதார, படைத்துறை நலன்களின் அடிப்படையில் எடுக்கப்படுவதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இன்று ஒக்ரோபர் 1 சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது

# நாளைய எதிர்காலம் சிறுவர்களே!

○ சி.நற்குணலிங்கம்

உலகில் வாழ்கின்ற மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் சிறுவர்களே. அவர்களின் உரிமைகள் மதிக்கப்படவேண்டும் மற்றும் அவர்களது கருத்துகளுக்கு செவிசாய்க்கப்பட வேண்டும் என்ற நோக்கில், 14.12.1954 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு அமைய ஒக்ரோபர் முதலாம் திகதி உலக சிறுவர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. அன்றுமுதல் இன்றுவரை ஒக்ரோபர் முதலாம் திகதி சிறுவர்களுக்குரிய தினமாக இங்கு கொண்டாடப்படுகிறது.

'ஒப்புரவு ஒழுகு' என்கிறது ஔவையாரின் ஆத்திசூடி. அதாவது உலகின் போக்கு எப்படி என அறிந்து அதற்கு ஏற்றாற் போல் நடந்துகொள்ள வேண்டும் என்பதாகும். உலகம் என்பது உங்களைச் சுற்றியிருக்கும் சமூகம். இந்தச் சமூகம் நன்மையானதாகவும் இருக்கும் ,தீமையானதாகவும் இருக்கும். நல்லவற்றை உள்வாங்கி அதற்கு ஏற்றாற்போல் ஒழுகவேண்டும். தீமைகளை விட்டுவிலகி செயற்படவேண்டும். இதுவே எதிர்கால சமூகத்தின் விழுதுகளான சிறார்களின் பொறுப்பாகும். சமூகம் பல விதிமுறைகளை விதித்திருக்கிறது. அந்த விதிமுறைகளின்படி ஒழுகாததன் காரணமாக பல சிக்கல்கள் தோன்றுகின்றன. சின்ன விடயமாக இருந்தாலும் கூட அதற்கென்று இருக்கும் விதிமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடித்தல்வேண்டும். 'தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை' என்பதற்கமைய சிறுபராயம் முதலே இவ்வாறான விதிமுறைகளைச் சரியான முறையில் கடைப்பிடித்தால் எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

சிறுபராயமானது அநாவசியமாக எதனையும் அலட்டிக்கொள்ளாத வயது. இந்த வயதில் நல்லவற்றை விதைப்போம் நல்லவற்றை அறுவடை செய்வோம். சிறுவர்களது தொழில் கல்வி கற்பது. அதைச் சரியான முறையில் மேற்கொள்ளல், அன்பு, பண்பு, பணிவு, இரக்கம், தீயதைத் தீண்டாது இருத்தல், சட்டங்களை விதிமுறைகளை மீறாதிருத்தல், கற்றலின்படி நடத்தல் ஆகிய சமூக விதிமுறைகளைச் சிறார்கள் பின்பற்ற வேண்டும்.

சிறுவர்களுக்கு வழங்கப்படும் பாசம், அரவணைப்பு என்பன எதிர்காலத்தில் முழுமையான ஆளுமை கொண்டவர்களாக வளர்வதற்கான அடிப்படையாக அமையும். அவர்களை அறிவில் பூரணத்துவம் பெற்றவர்களாகவும் திறமையானவர்களாகவும் மாற்றுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுப்பது முழுச் சமூகத்தினதும் பொறுப்பு. ஒரு நாடு தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் உயர்வடைந்து அபிவிருத்திப் படிநிலைகளை அடைந்துகொண்டாலும், அங்குள்ள சமூகம் மானிடப் பண்புகளை பெற்றிருக்காவிட்டால் அதனை ஒரு சிறந்த தேசம் எனக் கருத முடியாது. உலகத்தின் எதிர்காலம் குழந்தைகளிலேயே தங்கியுள்ளது. சிறுவர்களின் உலகம் பெரியோரது உலகத்தைவிட மிகவும் அழகானது. அந்த அழகை அவர்கள் எவ்வித தடையுமின்றி அனுபவிப்பதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுப்பது எல்லோரதும் கடமையாகும்.

நல்லொழுக்கம், ஆற்றல் நிறைந்த சிறுவர் தலைமுறை எதிர்காலத்தின் இருளை நீக்கும்.

'கடுகு சிறிதானாலும் காரம் பெரிது' என்பர். சிறியவர்களாக இருந்தாலும் சின்னச் சின்ன விடயங்களிலும் பிழைவிடாதீர்கள். சின்ன சின்ன விடயங்களில் விடும் பிழைகள்தான் சமூகத்தில் தற்போது தலைதூக்க முடியாத பல்வேறு குற்றச்செயல்களுக்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்திருக்கின்றன. எதிர்காலத்தை மாற்றியமைக்கப் போவது நீங்களே. ஆகவே மனதாலும் உடலாலும் வலுவானவர்களாகத் திகழுங்கள். அப்போதுதான் தற்போதுள்ள கொடிய சமூகத்திடமிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

இன்று சிறுவர் துஷ்பிரயோகம் சமூகத்தில் தலைவிரித்து ஆடுகிறது. சிறார்களாகிய உங்களை அடித்தல், தீயால் சுடுதல், மோசமான வார்த்தைப் பிரயோகம், நஞ்சூட்டுதல், மூச்சுத்திணறலை ஏற்படுத்துதல், பிச்சை எடுக்க வைத்தல், போதைவஸ்துக் கடத்தலுக்குப் பயன்படுத்தல், புறக்கணித்தல், வேலைக்கு அமர்த்துதல், உணர்ச்சியை மதிக்காமை, சமூகத் தொடர்பைத் துண்டித்தல், துன்புறுத்தல், கடத்தல், அச்சுறுத்தல், பாலியல் உறவுக்கான தூண்டுதல் ஆகிய சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்து உங்களை நீங்கள் பாதுகாத்துக்கொள்ள கற்றுக்கொள்ளுங்கள்.

உங்களைப் பாதுகாப்பதுடன் உங்கள் சக சிறார்களையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். சிறுவர்களாகிய நீங்கள் நல்லவற்றை இனங்கண்டு அவற்றை உள்வாங்கி ஒரு நல்ல பிரஜையாக வாழுங்கள். எதிர்காலச் சமூகத்துக்கும் பாதுகாப்பு நிறைந்த வலுவான அத்திபாரமாகுங்கள்.

உலகிலுள்ள அனைத்துச் சிறுவர்களுக்குமுள்ள அடிப்படை உரிமைகள் பற்றி அவர்கள் அறிந்திருந்தால்தான் உரிமை மீறல்பற்றி தெரிந்துகொள்ள முடியும்.

1. வாழ்வதற்கும் முன்னேறுவதற்குமான உரிமை
2. பிறப்பின்போது பெயர் ஒன்றையும் இன அடையாளத்தையும் பெற்றுக் கொள்ளும் உரிமை,
3. பெற்றோரைத் தெரிந்து கொள்வதற்கும் அவர்களது பாதுகாப்பை பெற்றுக்கொள்வதற்குமான உரிமை
4. பெற்றோரிடமிருந்து தாம் தனிமைப்படுத்தப்படாதிருப்பதற்கான உரிமை
5. கருத்தை வெளிப்படுத்தும் உரிமை
6. சிந்திக்க, மனச்சாட்சிப்படி நடக்க, சமயம் ஒன்றைப் பின்பற்ற சமூக உரிமை, சுகாதார வசதிகள் பெறும் உரிமை
7. போதிய கல்வியைப் பெறும் உரிமை
8. பொருளாதாரச் சுரண்டல்களிலிருந்து பாதுகாக்கும் உரிமை
9. பாலியல் வல்லுறவுகளிலிருந்து பாதுகாக்கும் உரிமை
10. சித்திரவதை அல்லது கொடூரமாக நடத்துதல் போன்ற தண்டனைகளிலிருந்து தவிர்த்துக்கொள்ளும் உரிமை
11. சுதந்திரத்துக்கும் பாதுகாப்புக்குமான உரிமை

எனப் பல்வேறு உரிமைகள் சிறுவர்களுக்கு உள்ளன. சிறுவர்கள் ஒரு நாட்டினதும் சமுதாயத்தினதும் அச்சாணி என்பது நாம் அறிந்தவிடயம். ஒரு சமூகத்தினது தூண்களாகவும் ஒரு நாட்டின் முதுகெலும்பாகவும் செயற்பட இருப்பவர்களும் இவர்களேதான். இவர்கள் அனைவரும் பாதுகாக்கப்பட்டு நல்வழிப்படுத்தப்படுவார்களாயின் அந்த சமூகம், அந்த நாடு தலைநிமிர்ந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.





# உளர்ப்புதினம்

பாகம் 2

○ இராகவன்



07

நான் விக்னேஸ்வராக் கல்லூரியில போய்ச் சேர்ந்து ஒரு மூண்டு நாலுமாதமாச் சங்கீதம் படிப்பிக்கிற ஆளைக் கண்ணாலையும் காணேல்ல. எங்கடை வகுப்பில இருந்து சங்கீதம் படிக்கப் போற பொடியள் எல்லாம் 'சங்கீத சேர்! சங்கீத சேர்!' எண்டு வாய் நிறையச் சொல்லுவாங்களே தவிர அவரின்ரை பெயர் ஒருத்தருக்கும் தெரிஞ்சிருக்கேல்ல. அவர் மேற்குப் புறத்திலயிருந்த கட்டடத்தின்ர மேல் மாடியில ஒரு தனியறையிலிருந்தார். படிக்கிற பொடி ,பெட்டையெல்லாம் சங்கீதப் பாடவேளைக்கு அங்கைதான் போய்ப் படிச்சிட்டு வருவினம். நான் சிலவேளை அந்தப் பக்கமாப் போகேக்குள்ள அவர் முதல்ல பாடுறதும் அதைத் தொடர்ந்து பிள்ளையள் பாடுறதும் காதிலவிழும். வகுப்பறைக் கதவு அல்லும் பகலும் பூட்டியிருக்கும்.

ஒரு நாள் எங்கடை வகுப்பில சங்கீதப்பாடமெடுக்கிறசிறிரங்கன் ஏதோ அலுவலா அந்தப் பக்கம் போகேக்குள்ள நானும் கூடப் போனனான். அப்பதான் அவன் பொக்கற்றுக்குள்ள கையை விட்டு ஒரு திறப்பையெடுத்து அந்த அறையைத் திறந்து "இண்டைக்குச் சங்கீத சேர் லீவு! இதுதான் நாங்கள் சங்கீதம் படிக்கிற அறை" எண்டு காட்டினான். அதுக்குள்ள மிருதங்கம், வீணை, ஆர்மோனியப்பெட்டி எண்டு எல்லாம் 'நீற்றா' அடுக்கி வைச்சிருந்ததைப் பாத்தன். அதோட சுவரிலயிருந்த 'ப்ளாக்போர்ட்டில' சோக்கால நெடுக்குப்பாட்டில ஒரு வீணையை அச்சொட்டாக கீறி அதின்ரை பாகங்களையும் அம்புக்குறியள் போட்டுக் குறிச்சு உறுப்பெழுத்தில எழுதியிருந்ததையும் கண்டிட்டு "இதை ஆர் கீறினது?" எண்டு கேட்டன். "வேற ஆர் எங்கடை சங்கீத சேர்தான்" எண்டு முகத்தில ஒரு பெருமிதத்தோட கதவை இழுத்துப் பூட்டினான்.

அப்ப எங்கடை வகுப்பறையெல்லாம் நிலமிழுக்காமல் வெறும் மண்ணாய்த்தானிருந்தது. அதால வேலை முடிக்கிறதுக்காக எங்கடை வகுப்பை மேற்குப் பக்க மேல்மாடிக்கு மாத்திச்சினம். எங்கடை வகுப்பறைக்கு முன்னாலதான் அப்ப சங்கீத சேரின்ரை அறையிருந்தது. அதுக்குள்ள எங்கடை வகுப்பு கொஞ்ச நாளைக்குள்ளயே குழப்படிகார வகுப்பு எண்டு பெயரெடுத்திட்டுது. வகுப்பை மாத்தின முதல் நாளே ஓர் அசம்பாவிதம் நடந்திட்டுது. ஒரு பாடத்துக்குச் சேர் வரேல்லை. பிறகென்ன எங்களுக்கெல்லாம் ஒரே கொண்டாட்டந்தானே. வகுப்பு ஒரு சந்தை மாதிரி மாறிச்சுது. ஒரே கூச்சலும் குழப்பமுமா இருந்தது.

மொனிற்றர் பொடியன், "ஒருத்தரும் சத்தம் போடவேண்டாம். சைலென்றாயிருங்கோ. பக்கத்தில சங்கீத வகுப்பு நடக்குது" எண்டு சொன்னான். அவன்ரை சொல்லை ஆர் காதில வாங்கினது? அவன் தன்ரபாட்டில சொல்லிக்கொண்டிருக்க நாங்கள் எங்கடை பாட்டிலயிருந்தம். அப்பவும் அந்தக் கதவு வழமைபோலப் பூட்டித்தானிருந்தது. எங்கடை வகுப்புப் பொடியள் சிலர் கீழ இறங்கியோடுறதும் பிறகு மேல ஏறி வாறதுமாயிருந்தாங்கள். அதோட 'காய் கூய்' எண்டு சத்தமும் போட்டுக் கொண்டிருந்தாங்கள். மொனிற்றர்பொடியன் நல்லாக் களைச்சுப் போனான். அப்பதான் திடீரென்று அதிசய நிகழ்வாகச் சட்டென்று அந்தக் கதவு திறந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிச்சம் எத்தனை குஞ்சுகள்?

சஞ்சீவி சிறுகதை

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

செல்வராணி கண் விழித்தபோது நேரம் தெரியவில்லை. மங்கத்தொடங்கி விட்டது. கிராமத்தில் தொலைவிலிருந்த காட்டுப்பகுதியிலிருந்து பெண்யானையின் அவலக்குரல் இடைக்கிடை கேட்டுக்கொண்டிருந்தது. அந்தக் குரலில் இருந்த துயரத்தை அவளால் உணரமுடிந்தது. போரானது மிருகங்களுக்கும் இழப்பையும், துயரத்தையும் கொடுத்துவிட்டுப் போனது. காற்று சற்றுப்பலமாகச் சுழன்றடிக்க அவளது வீடு என்று சொல்லப்படுகின்ற கொட்டில் ஆடத்தொடங்கியது.. இளையமகன் கோகுலன், தாயின் பழைய சீலையால் உடல் முழுவதும் போர்த்தியபடி படுத்திருந்தான். அவள், அவனை வாஞ்சையுடன் பார்த்தாள். உடம்பு எழும்ப முடியாமல் இருந்தது. கால்கள் சுண்டிச்சுண்டி வலித்தன. சதாகாலமும் ஓய்வில்லாத வேலை, கூலி வேலைக்குப் போயாகவேண்டும். நேற்றுத்தான் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு திரும்பியிருந்தாள். பலமணி நேரம் கொதிக்கும் தார் ரோட்டில் அவலக்குரல் எழுப்பிக்கொண்டிருந்தாள். வாழ்க்கை என்றால் எப்படியிருக்கும்? என்ன வடிவம்? என்ன அர்த்தம்? எல்லாவற்றையும் இப்போது அவள் மறந்துவிட்டாள். கண்ணாடியில் அவள் முகம்பார்த்து, ரசித்து பல வருடங்கள் ஆகிவிட்டன. ஒரு காலத்தில் அந்தக்கிராமத்தில் அவள் அழகிதான். 2009 ஆம் ஆண்டு இறுதிப்போர் வரும் முன்பு அவளால், அவளை ரசிக்கக்கூடியதாக இருந்தது. இப்போது உடலும் மனமும், எல்லாமுமே சிதைந்துவிட்டன. அவளுக்கும் குடும்பம் இருந்தது. நான்கு ஆண்பிள்ளைகள் துணைக்கு நின்றார்கள். தகப்பன் போல் மூவர் நெடுநெடுவென வளர்ந்து நின்றார்கள். இளையவன் சிறுவனாக இருந்தான்.

வெயிலில் குளித்து, எழுந்து, வயல்வேலை செய்து, காட்டுக்கு விறகுக்குப்போய், கரடுமுரடான பூமியில் ஓடி.. ஓடி... அவர்கள் உடம்பு முறுக்கேறி இருந்தது. கிராமத்தில் அவர்களுக்கு வயல் இருந்தது. கணவன் சுந்தரம் ட்ரக்டர் வைத்திருந்தார். உழவுவேலை இருந்தது. பிள்ளைகளும் சிறுவயதில் அதை ஓட்டக்கற்றுக்கொண்டார்கள். தகப்பனுக்குத் துணையாக இருந்தார்கள். யுத்தம் நடந்தநேரம். சிறுசிறு இடப்பெயர்வுகள் அசம்பாவிதங்களைச் சந்தித்து, கடைசியில்......!

வைரவர் கோயில் மணியடித்தது. இன்னும் உறக்கத்தில் இருப்பவர்களை அது எழும்பச்செய்தது. கிராமத்தின் 'பஸ் ஸ்டாண்ட்' என்று கருதப்படும் சந்தியில் கடை வைத்திருக்கும் விசுவலிங்கம், தனது கடையைத் திறந்துவிட்டார் என்பதைத்தான் கோயில் மணியின் ஓசை சொன்னது. ஒரேயொரு சாப்பாட்டுக்கடை அதுதான். அரசாங்க வேலையாள்களுக்கும், மற்றவர்களுக்கும் முழு வயிற்றுப்பசியைப் போக்காவிட்டாலும் அரைப்பசியைப் போக்கும் கடை அதுதான். நேரங்காலம் தெரியாமல் ரவுணிலிருந்து வந்துபோகும் பஸ் பயணிகளுக்கும், நடத்துநர்களுக்கும், ட்ரைவர்களுக்கும் அந்தக்கடைதான் தஞ்சம்.

செல்வராணி எழுந்துவிட்டாள். வாழ்வாதாரத்துக்குக் கொடுத்த கோழிக்குஞ்சுகள் கத்திக் கூப்பாடு போட்டன. முள்ளிவாய்க்காலில் நடந்த சண்டையோடு மட்டமாக இருந்த வீட்டை இப்போது தற்காலிக வீடாக மாற்றியிருந்தாள். நிறுவனங்கள் செய்த உதவியால் கிடைத்த தறப்பாள்கள், தகரங்கள், காட்டுத்தடிகள் கொண்டு இருப்பிடத்தை அமைத்துக் கொண்டாள். மிச்சமாயிருந்த தலைமயிர்களைத் தேடிப்பிடித்துக் கொண்டையாக்கிக் கொண்டாள். முகம் சந்தோசத்தைத் தொலைத்து வரண்டு போயிருந்தது. தண்ணி பாயாத வயல்நிலம் போல் அவளது உடல் மெலிந்து, சுருங்கிப்போயிருந்தது.

விசை கொடுக்கப்பட்ட பொம்மைபோல் அவள் இயங்கினாள். கடைசியுத்தம் வரும்போதெல்லாம் இறக்கையால் மூடிவளர்த்த மூன்று ஆண் குஞ்சுகளை, யுத்தத்துக்கு அவள் காவுகொடுத்துவிட்டாள். யுத்தத்தில் சிக்குண்டு, இடம்பெயரும் போது ட்ரக்டரில் போன இரண்டு பிள்ளைகளையும் குண்டுகள் பலியெடுத்துவிட்டன. அடுத்தவன் இடம்பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அகதிமுகாமில் இருந்தபோது, தேடுதல் நடவடிக்கையில் விசாரணைக்காகக் கொண்டுசெல்கிறோம் எனச்சொல்லி, இவள் கதறக்கதற அழைத்துச்சென்றார்கள்.

இன்னமும் விசாரிப்பு முடிவடையவில்லை. அவனும் திரும்பிவரவில்லை. இப்போது இருப்பவன் இளையவன் மட்டுமே .

மகனைத் தேடி அவள் அலையாத இடமில்லை, "இங்கே இருக்கிறான்.. அங்கே இருக்கிறான்... அவரிடம் போங்கள். அந்தாளைப் பிடியுங்கள்" என அலைந்தது தான் மிச்சம். இருந்தும், தாய்மனம் இப்போதும் அவன் இருப்பான்; மீண்டுவருவான் என நம்பிக்கையுடன் காத்திருந்தது. ஆனால், கணவர் சுந்தரத்தின் நிலை வேறுவிதமாக மாற்றம் பெற்றது. முகாமில் இருக்கும்போதே அவரிடமிருந்து கதை, சிரிப்பு, நித்திரை எல்லாமே விலகத்தொடங்கியிருந்தன. உணவைக் கூட வெறுக்கத்தொடங்கினார். தனிமையை நாடினார். இரவில் நித்திரையின்றிப் புலம்பினார். பறிகொடுத்த பிள்ளைகளின், தொலைந்த பிள்ளையின் பெயர்களைச் சொல்லி அழைத்தார். பயங்கரமான கனவுகள் கண்டதுபோல், அடிக்கடி இரவில் திடுக்கிட்டு அலறியபடி எழும்புவார். செல்வராணியால் கணவரை இந்தக்கோலத்தில் பார்க்கமுடியவில்லை.

நெருங்கினவர்களின் ஆலோசனைப்படி ஆஸ்பத்திருக்குக் கூட்டிச்சென்றாள். முதலில் அவரைப் பார்த்த டொக்டர் அடுத்து இன்னொரு டொக்டரிடம் காண்பிக்குமாறு துண்டு எழுதிக்கொடுத்தார். அங்குபோய் அவள் இருக்கும்போது அந்த இடம் அவளுக்குப் புதிதாக இருந்தது. அவள் இருப்புக்கொள்ளாமல் விசாரித்தபோது, ஆங்கிலத்தில் மனநலப்பிரச்சினை ('Psychiatrict Problem') என்றார்கள். மனநோய் என்றால் ஊரில் 'விசர்' என்று சொல்வார்கள். அவள் துவண்டுபோனாள். டொக்டர் பார்த்தார். கதைகளைக் கேட்டார். மனச்சோர்வு என்றார். மருந்துகள் ஒழுங்காகப் பாவிக்கவேண்டும். 'கவுங்சிலிங்' வரவேண்டும் என்று தொடர்ந்தார். அவள் எல்லாவற்றுக்கும் தலையாட்டினாள். இப்பொழுதும் மருந்து பாவித்துக் கொண்டுதான் இருக்கிறார். ஆனால், பழைய கணவரை அவளால் திரும்பப்பெற முடியவில்லை.

பொழுது நன்றாக விடிந்துவிட்டது. வீட்டைச் சுற்றியிருந்த மரங்கள் இலைகளை உதிர்த்துவிட்டிருந்தன. கோகுலனும் எழுந்துவிட்டான். அவள் ஆசையுடன் அவன் தலையினை வருடிக்கொடுத்தாள். வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கு எஞ்சியிருக்கும் ஒரு சொத்து. அவனுக்குப் பத்து வயது முடிந்துவிட்டது. அவனும் பள்ளிப்படிப்பைச் சரியாகப் பயன்படுத்தவில்லை. வீட்டையும்,வயலையும் சுற்றிக் கொண்டிருந்தான். கோழிக் கூட்டினுள் குஞ்சுகளின் அமளி பெரிதாகக் கேட்டது. "ஏனப்பு! குஞ்சுகள் சத்தம்போடுது?"

' அதுகள் இப்ப வளந்திட்டுதெல்லே. போடுற சாப்பாடு காணாது.அதுகள் எந்த நேரமும் நின்றுகொண்டு இருக்குதுகள். வெளியால திறந்தெல்லே விடவேணும். நீங்கள் அதுக்கும் விடமாட்டியள்.' இளையவன் குற்றம் சாட்டினான்.

அவள் எப்படி குஞ்சுகளை வெளியில் திறந்துவிடுவாள்? போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதாரமாக சமுர்த்தி வங்கி மூலம் கோழிக்குஞ்சுகள் கொடுக்கப்பட்டு கடைசியில் நான்கு குஞ்சுகள் மாத்திரமே எஞ்சிநிற்கின்றன. பதினாறுகுஞ்சுகள், சரியான பாதுகாப்பில்லாத காரணத்தினால் மழையாலும், நோயாலும், மரநாய்களாலும் பலியாகிவிட்டன. இந்தப்பயம் காரணமாக எஞ்சியிருக்கும் நான்கையும் பறிகொடுக்க அவள் தயாரில்லை. இதனால் கூட்டைவிட்டு வெளியே அவற்றை விட விரும்பவில்லை. வேலைநேரத்தில் தொலைத்துவிட்ட குஞ்சுகளை மறந்துபோவாள்.

அடிக்கடி காணாமற் போனவர்கள் அமைப்பு நடத்தும் கூட்டங்களுக்குப் போய்வருவாள். திரும்பிவர பொழுது சாய்ந்து விடும். அலைந்து திரிந்து, பொறுக்கியெடுத்த பிள்ளையின் புகைப்படம் இப்போது வெயில்பட்டு நிறம் மாறத்தொடங்கிவிட்டது. அவள் இரவில் தனிமையில் அழும்போது இளையவன்தான் ஆறுதற்படுத்துவான். அவனுக்கும் தனது காணாமற் போன அண்ணனைப் பார்க்க ஆசையாயிருந்தது. "ஏனம்மா யோசிக்கிறியள்...? இண்டைக்கு குஞ்சுகளை திறந்துவிடுங்கோ... நான் பாக்கிறன்".

'அப்பு வேண்டாம். ஏதேனும் வந்து பிடிச்சுக்கொண்டு போயிடும். கொஞ்ச நாளைக்கு கூட்டில நிக்கட்டும். போய் பாணை வாங்கி, அப்பாக்கு சாப்பாடு குடுத்திட்டு, மருந்து குடுக்கவேணும்."

அவளுக்குக் கஷ்டமும், துயரமும் வரும்போது இழந்த தனது ஆண் குஞ்சுகளை நினைப்பாள். அவர்கள் இருந்திருந்தால், இந்தநிலை எங்களுக்கு வந்திருக்குமா? கணவர் இப்படி ஆகியிருப்பாரா? 'கொண்டு போட்டாங்களே.. 'அவளுக்கு நினைக்க நினைக்க நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. மதியம் இருந்தாற்போல் மழைபெய்தது. வீடு எல்லாப்பக்கமும் ஒழுகியது. கிராமத்துக்கு வரும் பஸ் சத்தமிட்டுப்போனது. அந்தக் கையோடு செல்வராணியின் பள்ளித்தோழி புனிதா விரைந்து வருவதைக் கண்டாள். அவள் அடிக்கடி வருபவள் அல்ல. ஏதோ விஷயத்தைச் சொல்லத்தான் வருவதாக உணர்ந்தாள். புதுக்குடியிருப்பில் இருப்பவள். போரில் கணவனைப் பலிகொடுத்தவள். வந்த கையோடு விஷயத்தைச் சொன்னாள்.

"ராணி...... புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப்பிரிவில் போரில் காணாமப் போன ஆக்களுக்கெண்டு ஜனாதிபதி ஆணைக்குழு ஆக்கள் வந்து விசாரிக்கப் போயினமாம்...அதான் சொல்ல வந்தனான். மறக்காமல் போ.."

ராணி எதுவித துடிப்பும் இன்றி அவளைப் பார்த்தாள்.

(மறுபக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)




"அவையளப் பாத்து கதைச்சா என்ர பிள்ளையை கண்டுபிடிச்சு தந்துவிடுவினமே? றோட்டிலயெல்லே நிக்கிறம்.. கடவுளே! என்ன செய்யிறது... மனம் விடுகுது இல்லையே... தேடு... தேடு எண்டுதானே சொல்லுது... எங்கையாவது. முகாமிலோ, ஜெயிலிலோ அடைச்சு வைச்சிருக்காங்களோ? என்ர மகன்... இப்ப இருந்தால் எப்பிடியிருப்பான்?வளந்திருப்பான்? அப்புளங்கயிருக்கிறாய்?" அவள் வீரிட்டு அழத்தொடங்கினாள் .

"அழாதை. தேவையான எல்லாத்தையும் எடுத்து வைச்சுப் போடு . காலேல முதல் பஸ்ஸில போயிடு. 60 பேரைத்தான் விசாரிப்பினமாம் . வேளைக்குப்போனால் முன்னுக்கு கூப்பிடுவினம்" புனிதம் வந்த வேகத்தில் திரும்பிப் போனாள்.

ராணியின் மனது பரபரத்தது. நாளைக்கு கனவேலைகளை அவள் முடிக்கவேண்டும். இப்பவே தொடங்கியாக வேண்டும். காலையில் சமைத்து, கணவனின் மருந்துகளை இளையவனிடம் கொடுத்துவிடவேண்டும். இப்படியாக தூரப்போகும் நேரங்களில் அதுவும் பிள்ளையின் விஷயமாகப் போகும்போது கணவருக்கு வேறுவிதமாகச் சொல்வாள். அவரும் இலேசாகத் தலையசைப்பார். பொய் சொல்வதைத் தவிர வேறுவழியில்லை. கறையான் அரித்துப்போயிருந்த பழைய சூட்கேசை எடுத்தாள். அதனுள் அவளது விலைமதிக்க முடியாத சொத்து இருந்தது. சொப்பிங் 'பாக்' ஒன்று, அதற்குள் ஊதிப்போயிருந்தது. அதனை வெளியிலெடுத்து சரிபார்த்தாள். எவ்வளவு தடவை அவற்றைப் பார்த்திருப்பாள். எத்தனை ஆவணங்கள் அதிலிருந்தன? பிறப்பு - இறப்புச்சான்றிதழ்கள், அடையாள அட்டைகள், போட்டோக்கள், அரச திணைக்கள அதிகாரிகள் ஒப்பமிட்டுக் கொடுத்த கடிதங்கள், ஐ.சி.ஆர்.சி. குறியீடு பொறித்த கடிதங்கள், குடும்ப அட்டை . எல்லாவற்றையும் பத்திரப்படுத்தினாள்.

□ □ □ □

அவள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில், விசாரணை நடக்கவிருக்கும் மண்டபத்தை அடைந்து, இடத்தைப் பிடித்தாள். அதிலிருந்து கொண்டு நகர்ந்து நகர்ந்து முதற்கட்டப் பதிவை மேற்கொள்ளவேண்டும். அடுத்து அவர்களுக்கு இலக்கத்துடன் 'ரோக்கன்' வழங்கப்படும். அறுபது பேருக்கு மட்டும்தான் 'ரோக்கன்' என்று சொன்னாலும், அங்கு வந்தவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியாக இருந்தது. காரணம்... முதல்நாள் புலனாய்வுப்பிரிவு என்று சொல்லப்படுபவர்களால்... விசாரணைக்குப் போகிறவர்களுக்கு எச்சரிக்கை விடுத்திருப்பதாகச் செய்தி அடிபட்டிருந்தது. அதனால் பலர் தமது பயணத்தை இடைநிறுத்திக் கொண்டார்கள். பிரச்சினைகளை எதிர்கொள்ள அவர்கள் தயாராக இல்லை. அதையும் மீறிச் சிலர் துணிந்து வந்திருந்தார்கள். செல்வராணியின் காதிலும், இந்த விஷயம் சொல்லப்பட்டது. கொஞ்சம் ஆடித்தான் போய்விட்டாள். வீட்டிலிருந்த இளையவன் கோகிலனை நினைத்தாள். ஆனால், தனது மகனைக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற வெறி அவளை உட்காரவைத்தது. அந்த மண்டபமோ 'இழவுவீடு' போல் காட்சியளித்தது. அழுகைகளும், மூக்கை இழுத்துச் சிந்துபவர்களும், விம்மல்களும், கதறல் ஓசைகளும், பெருமூச்சுகளும். செல்வராணியும் விம்மலுடன் இருக்க உதவியாளர் என்று சொல்லப்படுகின்ற ஊழியர் "இருபதாம் ரோக்கன் வாங்கோ_" என்றார். அவள் பட்டென எழுந்தாள். உடல் தள்ளாடுவது போலிருந்தது: நடந்தாள். எதிரே கண்ணாடித்தடுப்பினால் அந்த அறை இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஓர் அறையில் மருத்துவர்கள் போன்ற தோற்றம் உள்ளவர்களும், மறு அறையில் சர்வதேசப் பார்வையாளர்களைப் பிரதிநிதித்து வப்படுத்தும் உள்ளூர்ப் பார்வையாளர்களும். அவள் குறிப்பிட்ட அறைக்குள் நுழைய செய்தியாளர்களின் கமராக்கள் 'பளிச் பளிச்' என்று படங்களை எடுத்துத் தள்ளின. விசாரணை அதிகாரிகள் கதையைக் கேட்க, அவள் சொல்வதை மொழிபெயர்ப்பதற்கு, மொழிபெயர்ப்பாளர்கள் தயாரானார்கள்.

"உங்கள் பெயரென்ன?

"செல்வராணி சுந்தரம்"

"காணாமல் போனவரின் பெயரென்ன?

"பிரதீபன்"

"நடந்த சம்பவத்தைச் சொல்லுங்கோ

சொன்னாள். பிறந்தகதை, வளர்ந்தகதை, குடும்பமாக இருந்தகதை, யுத்தங்கள் வந்தகதை, இடம்பெயர்ந்த கதை, குண்டுகளிலிருந்து தப்பின கதை, பிள்ளைகளைப் பறிகொடுத்த கதை, இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்த கதை, முகாமிலிருந்தபோது இராணுவம் பிரதீபனை பிடித்துக்கொண்டு போன கதை... சொன்னாள். அழுதழுது சொன்னாள். இன்னும் அழுவதற்கு அவளிடம் கண்ணீர் இருந்தது.

கேள்விகள் ?

கேள்விகள்...?

"எப்பிடி இராணுவம் பிடிச்சதெண்டு உறுதியாகச் சொல்லுறீர்கள்...?

"சிங்களத்தில் கதைச்சவை"

"ஷெல் தாக்குதல் எண்டு சொல்லுறீங்கள்... யார் அடித்தார்கள்? புலிப்பயங்கரவாதிகளா..? இராணுவமா?"

"எல்லாப் பக்கத்தாலையும் ஷெல் தாக்குதல் நடந்தது"

"ஆமியின்ர கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் போகும் போது துப்பாக்கிச் சூடுகள் நடந்தனவா..? மக்கள் கொல்லப்பட்டனரா?

"மக்கள் பலர் கொல்லப்பட்டனர் ..நான் நேரில் பார்த்தனான்".

"இப்ப... இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருக்கிறியள்... அவையளால உங்களுக்கு பிரச்சினையில்லையா?"

ராணிக்குக் குழப்பமாகயிருந்தது

"ஒரு பிரச்சினையுமில்லை. அவையள் தங்கட பாட்டில இருக்கினம். நாங்கள் எங்கட பாட்டில் இருக்கிறம்".

"வரி... பொருளாதாரம் எப்பிடி? "எதை கேக்கிறியள் ஐயா..?"

"அவவுக்கு விளங்கேல்ல... உங்கட சீவியப்பாடு எப்பிடிப்போகுது?"

"நான் கூலி வேலைக்குப் போறனான். அவர் நோயாளி . வேலைக்குப் போறதில்லை..."

"அரசாங்கம் என்ன உதவிசெய்தது?

"சமுர்த்தி வங்கியால எங்களுக்கு இருபது கோழிக்குஞ்சுகள் தந்தவை" விசாரணை அதிகாரிக்கு, மொழிபெயர்ப்பாளர் சொன்னவுடன் உஷாரானார்.

" குஞ்சுகளை நல்லா வளர்க்கிறியளோ?"

"வளர்க்கிறன்... இப்ப நாலு குஞ்சுகள் மட்டுந்தான் இருக்குது"

அதிகாரி அதிர்ச்சியடைந்தார்

"பதினாறு குஞ்சுகள் எப்பிடிக் காணாமல் போயின?"

"கொஞ்சம் நோய் வந்து சாக, மிச்சம் கீரி, பாம்பு, மரநாய் பிடிச்சுப் போட்டுது.."

"அப்ப... உங்களுக்கு குஞ்சுகளை எப்பிடி வளர்க்கிறதெண்டு பயிற்சி தரேல்லையோ..? இன்னமும் உங்கட மகன் உயிரோட இருப்பாரெண்டு நம்புறியளே?"

"நம்புறன். என்ர மகனை கண்டுபிடிச்சு தருவியளே..

"இப்ப சொல்லிப் போட்டியள் தானே.. நீங்களும் சும்மா இராமல் உங்கட மகனைத் தேடுங்கோ... நாங்களும் உங்கட மகனைத்தேடுறம்... நீங்க போகலாம். நாங்களும் தேடுறம். நீங்களும் தேடுங்கோ..."

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் என்ன சொல்கிறார்...யோசிக்க நேரமில்லை. வீட்டு நினைவு... மகன்... புருஷன் ..!

விரைந்து வந்து பஸ்ஸைப் பிடித்தாள். வீட்டை அடைந்தாள். வீடு அமைதியாக இருந்தது. நேரம் மதியம் கடந்துவிட்டது. "அப்பு.. அப்பு." இளையவனைக் கூப்பிட்டாள்

பதில் இல்லை. 'எங்கே போயிருப்பான்?'

கோழிக்கூட்டினைப் பார்த்தாள். திறந்திருந்தது. குஞ்சுகளைக் காணவில்லை. நாலுகுஞ்சுகளையும் தொலைத்துவிட்டாள். அடுத்த விசாரணைக்கு வரும் அதிகாரிக்கு என்ன பதில் சொல்வது? அவளுக்குத் தலையைச்சுற்றியது.


"அப்பு... கோகுலன்..."


அவள் பெருங்குரலில்கத்தினாள். அப்போது அயல்வீட்டு திரேசாப் பாட்டி விழுவதுபோல் ஓடிவந்து சொன்னாள்.

"அவன் கோழிக்குஞ்சுகளை மேச்சுக்கொண்டு நிண்டவன். இருந்தாப் போல் காட்டுப்பூனை ஒண்டு குஞ்சை தூக்கிக்கொண்டு காட்டுப்பக்கம் போட்டுது. அம்மா வந்தா கத்தப் போறா எண்டு சொல்லிக்கொண்டு பூனைக்குப் பின்னால குஞ்சைத் தேடிக்கொண்டு போட்டான்".

"ஐயோ! என்ர குஞ்சு... ஏன்ரா... காட்டுக்க போட்டாய்? நான் எல்லாத்தையும் தொலைச்சுப்போட்டன். உன்னையும்தொலைச்சுப் போடுவனே" அவள் அலறிக்கொண்டு, மகனைத் தேடி காட்டுப்பக்கம் ஓடினாள்.

(யாவும் சிந்தனை) ■



R.அன்பு
தரம் - 10
கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம்



ம.லக்ஷிதா
தரம் - 2A
யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்



ச.அபிசனா
தரம் -7
இணுவில் சிவகாமி அறநெறிப்பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிசுவையும்,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)




## பாதிக்கப்பட்டவர்களது வாக்குமூலம்

தாயாருடைய வாக்குமூலத்தின்படி மாலை 5 மணியவில் பிள்ளையின் துடிப்பு குறைவதாக கடமையில் இருந்த தாதியருக்கு பல தடவைகள் கூறியதாகவும் அவர்கள் அதனைக் கணக்கில் எடுக்காமல் அலட்சியமாக இருந்ததாகவும் தெரிவித்தார். குழந்தையின் துடிப்பு குறைந்துகொண்டு வருகின்ற போது தாதியர்களிடம் தெரிவித்தும் அவர்கள் அதனைக் கண்டுகொள்ளவில்லை, எனக் குறிப்பிடும் அவர் அத்துடன் தம்மைச் சத்திரசிகிச்சைக் கூடத்துக்குக் கொண்டுசெல்லும் முன்னரே குழந்தையின் துடிப்பு நின்றுபோய்விட்டதாகவும் கூறுகிறார்.

"பிரசவ அறைக்குள் மனைவியை அனுமதித்ததில் இருந்து நான் விடுதி வாசலில் எனது நான்கு வயதுப் பெண் குழந்தையோடு காத்திருந்தேன். மாலை 7.30 வரை மருத்துவர்கள் எவருமே மனைவியை வந்து பார்த்திருக்கவில்லை" என்று அந்தப் பெண்ணின் கணவர் தெரிவித்தார்.

"இனி எங்கள் வாழ்க்கையில் குழந்தைப் பாக்கியமே இல்லாது போய்விட்டது" என உடைந்து போய் அவர் அழத்தொடங்கினார்.


மாவட்ட பொது வைத்தியசாலை - கிளிநொச்சி
දිස්ත්‍රික් මහ රෝහල - කිලිනොච්චි
District General Hospital - Kilinochchi
Kandy Road, Kilinochchi

MY/04/45/

partially within abdominal cavity. Baby handed over to Paediatric team and resuscitated. Later, informed as still birth. Birth weight – 2.630kg.

Posterior Uterine wall rupture was identified which was extended up to the posterior vaginal wall. VOG attempted to repair but due to difficult access and ongoing bleeding, He decided to do Emergency Hysterectomy as life saving measures. It was informed to that mother intraoperatively as she was in Spinal Anesthesia.

Emergency Hysterectomy was completed. Intraoperative bleeding was 3 Liters. She was transfused by 5.0 blood and ICU care was given for one day.

She was transferred to ward on the next day. Both parents were discussed about the incident. Without any complications she was discharged on 30th of July 2023.

**Antenatal follow up**
She had booking visit at 16 weeks. She was offered with antenatal growth scan at 28, 32 & 36, At 36 weeks scan it was suspected to have small for gestational (SGA) age, so it was decided to repeat scan in 2 weeks. Repeat scan also suggest SGA, she was send to VOG opinion, at the same day VOG did scan, due to suspected SGA, she was requested to admit for delivery by 38 weeks. She was admitted at 38+2 weeks. During ward stay it was wrongly informed to VOG as she was admitted due to suspected large baby, anyway VOG assessed her clinically & ultrasonically, on that time estimated fetal weight was 2.6 kg with normal CTG. It was decided to discharge & await for spontaneous onset of labour till 40+2 weeks of gestation.

Director,
District General Hospital,
Kilinochchi.

Dr.S.Suganthan
Director
District General Hospital
Kilinochchi

Copy:
1. Secretary, Ministry of Health, Suwasiripaya, Colombo 10.
2. Provincial Director of Health Services, Northern Province.
3. Regional Director of Health Services, Kilinochchi.
4. Regional Coordinator, Human Rights Commission of Sri Lanka, Regional Office, Jaffna.



## மருத்துவத்துறையினரது கருத்து என்ன?

"தாயாரது கர்ப்பகாலம் ஒன்பது மாதங்களைத் தாண்டிவிட்டதாலும், பிரசவம் இயற்கையாக தூண்டப்பட்டு பிரசவ வலி தானாக ஏற்படாத காரணத்தினாலும் செயற்கையாகப் பிரசவத்தினைத் தூண்டுவது வழமையான நடைமுறை. அதற்குப் பல்வேறு வழிமுறைகள் கையாளப்படுகின்றன். அதில் ஒரு வழிமுறையே குறித்த தாயாரது சிகிச்சையின்போது பின்பற்றப்பட்டுள்ளது" என கிளிநொச்சி மருத்துவமனையில் நீண்டகாலமாகப் பணியாற்றி இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். இருப்பினும் "குறித்த முறையில் பிரசவம் தூண்டப்பட்டி ருந்தால் தாயாரை தகுந்த கண்காணிப்பில் வைத்திருப்பது அவசியம். ஏனெனில் குறித்த தூண்டல் அளவுக்கு அதிகமாகினால் குழந்தைக்கு ஆபத்து நேரிடலாம். அத்துடன் கருப்பைக் கழுத்து 3 சென்ரிமீற்றர் விரிவடைந்ததும்தான் உண்மையான பிரவச நடைமுறை ஆரம்பமாகிறது. அதன்பின்னர் தாயாரைப் பிரசவ அறைக்குள் எடுத்து நேரடித் தொடர் கண்காணிப்பில் வைத்திருக்க வேண்டும்." என்றார்.

இருப்பினும் பணிப்பாளரது அறிக்கையின்படி கருப்பைக் கழுத்து 5 சென்ரிமீற்றர் வரை விரிவடைந்தமையானது மாலை 1.20 மணிக்கு பன்னீர்க்குடம் உடைந்ததை அடுத்தே தெரியவந்துள்ளதாக நாம் கொள்ளவேண்டி உள்ளது. அதாவது உண்மையான பிரசவம் ஆரம்பித்த பின்னரும் தாயார் முழுமையான கண்காணிப்புக்குள் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை .

நாம் கலந்துரையாடிய மருத்துவர்களது கருத்தின்படி கர்ப்பப்பையின் கழுத்தானது மூன்று சென்ரிமீற்றர் விரிவடைந்த பின்னர் ஒரு மணிநேரத்துக்கு ஒரு சென்ரிமீற்றர் வீதம் 10 சென்ரிமீற்றர் விரிவடைந்த பின்னரே பிரசவத்தின் இரண்டாவது கட்டம் ஆரம்பமாகும். இதன் பின்னரே குழந்தையானது தாயாரின் பிறப்பு வாசலின் ஊடாகக் கீழே இறங்க ஆரம்பிக்கும்.

ஏற்கனவே குழந்தை ஒன்றினைப் பிரசவித்துள்ள ஒரு தாயாருக்கு இந்த இரண்டாம் கட்டமானது ஆகக்கூடியது இரண்டு மணித்தியாலமாக அமையும். அந்த இரண்டு மணித்தியாலத்தினுள் குழந்தை தானாகப் பிறக்காவிடின் மருத்துவர்கள் தகுந்தமுறை ஊடாக பிரசவத்தினை மேற்கொள்வதற்கான முடிவினை எடுப்பார்கள்.

கருப்பைக் கழுத்தானது 10 சென்ரிமீற்றர் விரிவடைந்து விட்டது. அப்படியானால் மாலை 7.30 மணிக்கு முன்னர் சுகப்பிரசவம் நடந்திருக்க வேண்டும். ஆனால் மூத்த மருத்துவர் தாயாரை மாலை 7.10 மணிக்குப் பார்வையிட்ட பின்னர் மகப்பேற்றியல் நிபுணருக்கு அறிவித்தது வரையில் செய்யப்பட்ட மருத்துவ நடைமுறைகளை, அவை மேற்கொள்ளப்பட்ட நேரத்துடன் வழங்கிய பணிப்பாளரது அறிக்கையானது, அதற்குப் பின்னர் இடம்பெற்ற எந்த நடைமுறைகள் தொடர்பாகவும் நேரத்தினைக் குறிப்பிடவில்லை.

குறிப்பாக "பணிப்பரளரது அறிக்கையில் 7.10 மணிக்குத் தாயாரது நிலைவரம் குறித்து அறிவித்தலை மூத்த மருத்துவரிடம் இருந்து பெற்றுக்கொண்ட மகப்பேற்றியல் நிபுணர் எப்போது தாயாரை வந்து பார்வையிட்டார் (நேரம்) என்ற விவரம் இல்லை. அவ்வாறே பிரவசத்தின் இரண்டாம் கட்டம் நீண்டு செல்வதாக எப்போது (நேரம்) மகப்பேற்று நிபுணர் தீர்மானித்தார் என்ற விவரமும் இல்லை." எனச் சுட்டிக்காட்டினார் ஒரு மகப்பேற்றியல் நிபுணர்.

அத்துடன் "இந்தத் தாயாருடைய மருத்துவ அறிக்கைகளின்படி முதலாவது பிள்ளையும் ஆயுதம் மூலமே பிரசவிக்கப்பட்டுள்ளது. அந்த நிலையில் தற்போதைய பிரசவமும் ஆயுதம் மூலம் நிகழ்த்தப்படவேண்டும் என மகப்பேற்றியல் நிபுணர் முடிவெடுத்திருந்தால், அதை அவரே செய்திருக்க வேண்டும். ஆனால் பணிப்பாளரது அறிக்கையின்படி ஆயுதப்பிரசவம் மகப்பேற்றியல் நிபுணரால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது தெரியவருகிறது. பணிப்பாளரது அறிக்கையின் பிரகாரம் அவசர 'சிசேரியனும்' மகப்பேற்று நிபுணரால் செய்யப்படவில்லை. அதனைச் செய்த மூத்த மருத்துவர் வயிற்றறைக் குழியினைத் திறந்து பார்க்கும் வரையில் கர்ப்பப்பை வெடித்திருந்தது எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. இந்தச் சத்திரசிகிச்சை நடைபெறும்போது மகப்பேற்றியல் நிபுணர் சத்திரசிகிச்சைக் கூடத்தினுள் இருக்கவில்லை என்பதும் பணிப்பாளரது அறிக்கையில் மறைமுகமாகக் கூறப்பட் டுள்ளது." என்றார் அவர்.

மேலும் "இந்தப் பிரசவம் தொடங்கியதில் இருந்து நிறைவடையும் வரை குழந்தையினது இதயத்துடிப்பு மற்றும் தாயாரின் (இதயத்துடிப்பு சுவாச வீதம் முதலிய) கணியங்கள் சாதாரணமாகவே இருந்தன என பணிப்பாளரது அறிக்கை கூறுகிறது. ஆனால் கர்ப்பப்பை வெடித்தமையினை அடுத்து குழந்தையின் இதயத்துடிப்பு மற்றும் தாயாரது கணியங்களில் சடுதியான மாற்றம் ஏற்பட்டிருக்கும். உரிய மருத்துவக் கண்காணிப்புகள் வழங்கப்பட்டிருந்தால், கர்ப்பப்பை வெடித்திருந்தமையை 'சிசேரியன்' செய்வதற்கு முன்பாகவே கண்டறிந்திருக்க முடியும்;" என்றவர்.

"பணிப்பாளரது அறிக்கையானது மருத்துவரீதியாக பல தகவல்களைக் கூறாமல் விடுகிறது. சரியான விதத்தில் இது தொடர்பான மருத்துவ ஆய்வு விசாரணைகள் (Clinical audit) மேற்கொள்ளப்பட்டால் ஏற்பட்ட மருத்துவ மற்றும் நிர்வாகத் தவறுகளை இனம்காணவும் எதிர்காலத்தில் அவற்றினைத் தடுக்கவும் முடியும்" எனக் குறிப்பிட்டார். கிளிநொச்சி மருத்துவமனையில் கடமையாற்றும் பணியாளர்கள் தமது அடையாளங்களை வெளிப்படுத்தவேண்டாம் என்ற கோரிக்கையுடன் வெளிப்படுத்திய தகவல்கள் எமக்கு ஏற்பட்ட சந்தேகங்களை உறுதிப்படுத்துவதாக அமைந்தது.

அவர்களது தகவல்களின் படி "குறித்த தாயார் பிரசவ அறையில் நீண்ட நேரமாக சுகப்பிரசவம் ஆகாமல் போராடிக்கொண்டிருந்தபோது அவரைப் பார்வையிட்ட மகப்பேற்றுத்துறையில் பல்லாண்டு அனுபவம் உடைய மூத்த மருத்துவர் ஒருவர் குறித்த தாயாருக்கு சிசேரியன் மூலம் பிரசவம் மேற்கொள்வதற்கு மகப்பேற்றியல் மருத்துவ நிபுணருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். ஆனால் இந்த ஆலோசனை ஏற்கப்படவில்லை".

"பின்னர் இதே மூத்த மருத்துவர்தான் கீழே இறங்கியிருந்த குழந்தையின் தலையானது மீண்டும் மேலே சென்றுள்ளதைக் கண்டுபிடித்து தாயாரது கர்ப்பப்பையானது வெடித்திருக்கலாம் என்ற ஊகத்தினை முதன் முதலில் மகப்பேற்றியல் நிபுணருக்கு அறிவித்திருந்தார். அதனையடுத்தே அவசர சிசேரியன் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது" எனத் தெரிவித்தனர்.

அவ்வாறாயின் "குறித்த தகவல் எவ்வாறு அறிக்கையிடப்படாமல் போனது?" என்று கேட்டபோது "நோயாளரின் தலைமாட்டு அறிக்கையில் (BHT) அவர்களால் எழுதப்படுவதே இறுதியானதாகும். அந்த அறிக்கையினை தமக்குச் சாதகமான முறையில் எழுத மாட்டார்களா என்ன?" என்று பதில் கேள்வி எழுப்பினார்கள்.

தமது சந்தேகத்துக்கு ஆதாரமாக குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட ஆரம்ப புலன்விசாரணைக் குழுவில் இருந்து தாமாக விலகுவதாக அதற்கான காரணங்ளோடு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்து அனுப்பிய கடிதத்தினை கூறுவதோடு, அந்தக் கடிதத்தில் "தம்மைச் சுற்றி இடம்பெறும் சம்பவங்கள் குறித்த விசாரணையினை உண்மையாகவும் முழுமையாகவும் நடத்தி முடிக்க முடியாது என்பதை உணர்த்துவதாகவும், அதனால் இந்த விசாரணைக்குழுவின் உறுப்பினராகச் செயற்படுவதில் இருந்து தாமாக விலகிக் கொள்வதாகவும்" தெரிவித்துள்ள மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், "குறித்த விசாரணையினை மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் விசாரணைக்குழுவினரிடம் பாரப்படுத்துமாறு பரிந்துரை செய்துள்ளார்" என விளக்குகிறார்கள்.

### சட்டவாளர்களது கருத்து

நாம் தொடர்புகொண்ட சட்டவாளர்களது கருத்தின்படி குறித்த தாயார் தனது பாதிப்புக்கான சட்டரீதியான நிவாரணத்தினை தகுந்த சட்ட ஆலோசனையின் ஊடாகப் பெற முயற்சிக்க வேண்டும். தவறுகள் நடந்திருப்பின் அவை மீள நிகழாமல் தடுப்பதற்கான வழியும் அதுவேயாகும்.

சட்டவாளர்கள் கூறுவதன்படி "மருத்துவத் தவறுகள் பொதுவாக குடியியல் சட்டத்தின் ஊடாகவே அணுகப்படுகிறது. அதாவது அவைகள் வேண்டும் என்று செய்யும் குற்றம் அல்ல என்று கருதப்படுகின்றன. இலங்கையில் இவ்வாறான மருத்துவத் தவறுகளைக் கையாள்வதற்கான விசேட சட்டங்கள் இல்லை என்பதால் ரோமன் டச்சு சட்டம் தான் இதற்காகப் பயன்படுத்தப்படுகிறது."

"இந்தச் சட்டத்தின் கீழ் நிவாரணம் பெறுவதற்கு பாதிக்கப்பட்ட தரப்பினர் மூன்று விடயங்களை நிரூபிக்க வேண்டும். அதாவது பாதிப்பை ஏற்படுத்தியவர் அவ்வாறு பாதிப்பினை ஏற்படுத்தாதிருக்கும் கடப்பாடு உடையவர் (கவனக்கடப்பாடு/duty of care) என்பது முதலாவதாக நிரூபிக்கப்படவேண்டும். சுகாதாரத்துறையினர் அந்தக் கடப்பாட்டினைக் கொண்டுள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது."

"அடுத்துக் குறித்த கடப்பாடு அவர்களால் மீறப்பட்டிருப்பதாக நிரூபிக்க வேண்டும். இறுதியாக, அவ்வாறு கவனக் கடப்பாடு மீறப்பட்டதால் பாதிக்கப்பட்ட தரப்புக்கு அளவிடக்கூடிய ஒரு இழப்பு நேரிட்டிருக்க வேண்டும்."

"இருப்பினும் குறித்த பாதிப்பானது பாரதூரமான கவனக்குறைவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அது குற்றவியல் சட்டத்தின் ஊடாகக் கையாளப்படுவதற்கும் வாய்ப்புகள் உண்டு" என்று சொல்கின்றன சட்ட ஏற்பாடுகள். என்னதான் சட்டம் ஆயிரம் சொன்னாலும், மருத்துவத்துறையினர் தமது விளக்கங் களை முன்வைத்தாலும். அந்த இளம் தம்பதியரின் சிசுவும், அகற்றப்பட்ட கருப்பையும் இனி மீளக்கிடைக்கப் போவதில்லையே. எவ்வளவு பெரிய, நிவர்த்திக்க முடியா இழப்பு இது? இந்தநிலையில் பாதிக்கப்பட்ட தாயார் நீதியையும் இழப்பீட்டினையும் பெற்றுக்கொள்வதற்கும், அவ்வாறான பாதிப்புகள் எதிர்காலத்தில் நிகழாமல் இருப்பதற்கும் உதவப்போகிறவர்கள் யார் என்பதே இப்போதுள்ள கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணாடி வீடு






ரஜிதா அரிச்சந்திரன்

ஷோபா குளித்துக் கொண்டிருந்தாள். திடீரென்று தண்ணீரில் கலந்த சோப்பினால் உருவான பெரிய குமிழி ஒன்றினால் கவரப்பட்டு, அதனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தக் குமிழி அவளுக்கு அவளின் தந்தையை நினைவுபடுத்தியது. அவள் குழந்தையாக இருக்கும் போது அவர் வாங்கி வந்த 'பபிள்ஸ்' ஊதி விளையாடியதும், தந்தை அதனைப் பிடித்து உடைத்த நினைவுகளும் வந்தன. அந்த நினைவு மேலீட்டால், ஷோபாவின் கண்களிலிருந்து அருவி போல கண்ணீர் கொட்டியது. நல்லவேளையாக, அந்தக் கண்ணீர் மழைக்கு ஆனந்தியின் குரல் தடைபோட்டது.

"ஷோபா"
"பெரியம்மா குளித்துக் கொண்டிருக்கிறேன்... "
" சரியம்மா குளித்துவிட்டு வா"
சற்றுநேரத்திலேயே குளியலறையில் இருந்து வெளியே வந்தாள் ஷோபா.
"ஏன் பெரியம்மா கூப்பிட்டனீங்க?"
"இல்லையம்மா, காலையிலிருந்து உன்னக் காணல அதுதான்"
என்று சொல்லிக்கொண்டே தேநீரை ஷோபாவிடம் கொடுத்தாள் விக்னேஸ்.
அப்போதுதான் அங்கு டொடா இல்லாததை ஷோபா கவனித்தாள்.
" பெரியம்மா, டொடா அண்ணி எங்க ?"
"டொடாவின் பமிலி லண்டனுக்கு வந்திருக்கினமாம் . றிஸீவ் பண்ண போயிட்டா"
" ஓ, அப்படியா? சரி நான் பார்க் போயிட்டு வாறன்"
என்று ஷோபா புறப்பட்டாள்.
"சரிம்மா பத்திரமாப் போயிட்டு வா" என விக்னேஸ் வழியனுப்பி வைத்தாள்.
"பார்க்குக்கு" வந்த ஷோபாவைக் கண்ட அசோக் அவள் பக்கம் ஓடிச் சென்றான்.
"என்ன ஷோபா இண்டைக்கு ஒருமாதிரி இருக்கிறாய்? "
"திடீரெண்டு அப்பா ஞாபகம் வந்திட்டுது" என்றாள்.
"சரி, கவலைப்படாதை. இனியெல்லாம் உனக்கு நல்லதாவே நடக்கும். உன்ர அப்பாவிரன் ஆசி உன்னோட துணை இருக்கும்"
அசோக் சொன்ன ஆறுதல் அவளுக்கு இதமாக இருந்தது. இருவரும் கதைத்தபடியே வகுப்புக்குச் சென்றனர்.

▣ ▣ ▣ ▣

டொடாவின் குடும்பத்தினர் வந்த பின்னர், அந்த வீட்டில் ஒரே கொண்டாட்டம் தான். டொடாவின் தம்பி பிஸ்ரோவுக்கு , ஷோபாவைக் கண்டதுமே பிடித்துப் போய்விட்டது.
"மச்சான், எனக்கு ஷோபாவைத் திருமணம் செய்து வைப்பீர்களா?" எனப் பிஸ்ரோ அருணிடம் வாய்விட்டே கேட்டுவிட்டான். அருணுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. " அதெல்லாம் முடியாது" என்று அருண் வெட்டு ஒன்று துண்டு ரண்டு என்று எல்லோர் முன்னிலையிலும் சொல்ல, பிஸ்ரோ தலையைக் குனிந்தபடி போய்விட்டான்.
என்றாலும் அவன் ஓயவில்லை. அருணிடம் தன் முயற்சி தோற்றதால், அவன் விக்னேஸிடம் சென்று ஷோபாவைத் திருமணம் செய்துதரும்படி கேட்டான்.
"பிஸ்ரோ, அவள் என்ர சொந்தப்பிள்ளை இல்லை. என்ர தங்கச்சியின்ர மகள். அவளின்ர வாழ்க்கையைப் பற்றி நான் முடிவெடுக்க ஏலாதே" என்று பட்டும்படாமல் சொன்னாள் விக்னேஸ்.
" அப்ப ஷோபாவிடம் கேட்கட்டுமா? அவள் முடிவெடுத்தால் சரியா?" என்று பிஸ்ரோ விடாப்பிடியாக நின்றான்.
" அப்படியில்லை, பெரியவைதான் முடிவெடுக்கோணும்" என்று விக்னேஸ் சொல்ல, அவனுக்குக் கோபம் வந்துவிட்டது.சகட்டுமேனிக்கு ஆங்கிலத்தில் கத்தத் தொடங்கிவிட்டான். அதைப் பார்த்த அருணுக்கும் கோபம் வந்துவிட்டது. அவன்கூட தாயை இப்படி ஒருநாளும் பேசியதில்லை.
"டொடா, உன் தம்பியை மரியாதையோட கதைக்கச் சொல்லு. இல்லாட்டி நான் மனிசனா இருக்கமாட்டன்" என்று அவனும் கத்தினான். நிலைமையின் விபரீதத்தை டொடா உணர்ந்து கொண்டாள். தன் தம்பியைக் கடிந்தபடி அவனைத் தரதரவென இழுத்துக்கொண்டு அவனது அறைக்குள் போய்விட்டாள்.

சில மணித்தியாலங்கள் கழிந்திருக்கும்.
"டொக்..டொக்..டொக்.."
கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. எழுந்து கதவைத் திறந்த விக்னேஸ் எதிரே பிஸ்ரோ நிற்பதைக் கண்டு புருவத்தை என்ன என்பது போல உயர்த்தினாள். "சொரி அன்ரி, நான் கொஞ்சம் எமோஷன் ஆகிட்டன். நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது.என்னை மன்னிச்சிடுங்க. ஷோபா மேல நான் உயிரா இருக்கன். எனக்கு தமிழ்ப் பொண்ணு தான் வேணும்.எனக்கு எங்கட கல்ச்சர் பிடிக்கேலை. எனக்கு ஒருவனுக்கு ஒருத்தி எண்ட மாதிரி வாழ வேண்டும். ஷோபாவைக் கட்டினால் நான் உங்கட மதத்துக்கே மாறவும் தயார். இப்ப நான் யோகாசனம் பழகத் தொடங்கிட்டன். ப்ளீஸ் எப்பிடியாவது ஷோபாவை எனக்கு கட்டி வையுங்க" என்று கெஞ்சினான் பிஸ்ரோ.

சஞ்சீவி தொடர்கதை

" சரி பிஸ்ரோ, ஷோபாவைக் கேட்டுப்பாக்கிறன்" என்று விக்னேஸ் சொன்னதும், ஓரளவு முகமலர்ச்சியோடு வெளியே வந்தான் பிஸ்ரோ. அவன் விக்னேஸின் அறையில் இருந்து வந்ததைக் கண்ட டொடாவுக்கு உதறலெடுத்தது.
"பிஸ்ரோ, நான் நிம்மதியா வாழுறது உனக்குப் பிடிக்கவில்லையா? நீயே என் வாழ்க்கையை கெடுத்துவிடப் பார்க்கிறாயா? அப்பா, அம்மா இல்லாமல் நீயும் நானும் வாழ்ந்ததுபோல என் பிள்ளைகளும் வாழணும் என்று ஆசைப்படுறியா? " எனக் கத்தினாள் டொடா.
" வெய்ட் கத்தாதே. நான் சொல்றதைக் கேள். உன்னைப் போல வாழத்தான் எனக்கும் ஆசை . அதான் என்ர ஆசையை அன்ரியிட்ட எடுத்துச்சொன்னனான். அன்ரி ஷோபாவோட கதைக்கிறன் என்று சொன்னவா" என்று அவன் சொன்னதைக் கேட்டதும் டொடாவுக்கு நெஞ்சில பாலை வார்த்தது போலானது.
"சொரி பிஸ்ரோ, " என்று அவனைச் செல்லமாக அணைத்து நெற்றியில் முத்தமிட்டாள்.

(தொடரும்)



# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

1505–1948 வரை

## 1947 டிசம்பர் 10

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும் தீர்மானம் பிரிட்டிஷ் நாடாளுமன்ற பிரபுக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

## 1948 ஜனவரி

அஸ்கிரிய,மல்வத்த பீடாதிபதிகள் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கவையும் ,போக்குவரத்து அமைச்சர் கொத்தலாவலையையும் சந்தித்து சுதந்திர இலங்கையின் அரசமைப்பில் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென கோரிக்கை விடுத்தனர். டி.எஸ்.சேனநாயக்கவும் கொத்தலாவலையும் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்வதாக உறுதியளித்தனர்.

## 1948 ஜனவரி 16

1948 ஆம் ஆண்டு ஜனவரி 16 ம் திகதி மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் ஏ.சின்னலெப்பை இலங்கையின் தேசியக்கொடியாக சிங்கக்கொடியே இருக்கவேண்டுமென நாடாளுமன்றத்தில் பிரேரணையொன்றைக்கொண்டு வந்தார். இந்தப்பிரேரணை மீதான விவாதத்தில் செல்வநாயகம் , 'சிங்கக்கொடி இலங்கை முழுவதற்கும் செல்லுபடியாகாது மூன்று இனத்தவர்களுக்கும் மூன்று கொடி இருக்க வேண்டும் .சிங்களவர்களுக்கு சிங்கக்கொடியும், தமிழர்களுக்கு நந்திக்கொடியும், முஸ்லிம்களுக்கு பிறைக்கொடியும் இருக்கவேண்டும்' என்று உரையாற்றினார்.
கோப்பாய் உறுப்பினர் வன்னியசிங்கம் தேசியக்கொடி மூன்று வர்ணங்களைக்கொண்டதாக காவி,சிவப்பு,வெள்ளை வர்ணங்களோடு இருக்கவேண்டுமெனத் தெரிவித்தார்.
வவுனியா உறுப்பினர் செ.சுந்தரலிங்கம் வாளேந்திய சிங்கத்தின் மேல் காவி நிறக்கோடும் கீழே வெள்ளை நிறக்கோடும் இருக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.
ஜீ.ஜீ.யின் உருக்கமான உரை
"நான் எமது தமிழ் மக்களின் பிரதிநிதியாக முன்னைய சபையிலும் தற்போதைய சபையிலும் தமிழர்களின் தலைவனாக 16 ஆண்டுகள் இருந்துள்ளேன். பல சந்தர்ப்பங்களில் நான் அதிகார வர்க்கத்துக்கு எதிராகச் செயற்பட்டிருக்கிறேன்.இன்று நான் அடைந்த மனவேதனையைப்போல் முன்னொரு போதும் அடையவில்லை.இது ஒரு சாதாரண விடயமல்ல. இந்தப்பிரதிநிதிகள் சபை தங்களுக்குள்ளேயே ஒரு சபையைத் தெரிவு செய்து தேசியக்கொடி வடிவமைக்கும் பொறுப்பை அந்தச் சபையிடம் ஒப்படைத்தது. அந்தச்சபை இந்த விடயத்தில் அனுபவமுள்ளவர்களின் ஆலோசனையைக்கேட்டுச் செயற்படும் என நம்பியிருந்தேன். இந்த விடயத்தில் எமக்குள் பிளவு வரக்கூடாது என்பதற்காக நேற்றுக் காலை வரை எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என இரு பகுதியினருடனும் பேச்சிலீடுபட்டேன். இது தேசியக்கொடியல்ல, இன்று ஆட்சி செய்யும் அதிகார வர்க்கத்தின் கொடி. கோபத்தையும் குறுகிய மனப்பான்மையையும் காட்டுவதற்கு இது சந்தர்ப்பமல்ல. நாங்கள் எவ்வளவுக்கு விட்டுக்கொடுக்கமுடியுமோ அவ்வளவுக்கு விட்டுக் கொடுத்திருக்கிறோம். இன்று அதிகாரம் வகிக்கும் பெரும்பான்மைக்கட்சியினரை நான் கேட்டுக்கொள்வது இது தான். சகல மக்களினதும் அனுதாபத்தையும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்வதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பம்.
சிறுபான்மையினர் விட்டுக்கொடுக்கவேண்டுமென ஏ.ஈ.குணசிங்க கூறினார். அவரது கூற்றைப்பார்த்து அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. இன்று நீங்கள் சுதந்திரம் பற்றிப் பேசுகிறீர்கள். "எங்கும் சுதந்திரம் அனைவரும் சமம் என்பதே பேச்சு. ஆனால் இன்று நாங்கள் ஒரு எஜமானிடமிருந்து விடுபட்டு இன்னொரு எஜமானிடம் அடிமைப்பட்டிருக்கிறோம்" என்று அன்று நாடாளுமன்றில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் உரையாற்றினார்.
பிலிப் குணவர்த்தன, ஜனாப் ஜாயா, வில்மட் பெரேரா, தகநாயக்கா, கொல்வின் ஆர்.டீ.சில்வா ஆகியோரும் சிங்கக்கொடிக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org